**01. அரசாங்கத்தின் உர நிவாரணக் கொள்கை**

01.1. இரண்டு (02) ஹெக்டேயர்கள் எனும் உச்ச வரையறைக்கு அமைய, நெல்லை பயிரிடும் விவசாயிகள், நெற் பயிருக்கான உரத்தை இலவசமாக பெற்றுக் கொள்ள உரிதுடையவர்களாவர்.

01.2. இரண்டு (02) ஹெக்டேயர்களுக்கு அதிகமான காணிகளில் நெல்லைப் பயிரிடுகின்ற விவசாயிகளை விரைவில் இனங்காணத் தேவையான ஒரு வேலைத் திட்டத்தை கமநல அபிவிருத்தி ஆணையாளர் செயற்படுத்த வேண்டும். அந்த விவசாயிகளினது தகவல்கள் உள்ளடங்கிய ஒரு தரவுத் தளத்தைத் தயாரித்து கமத்தொழில் இராஜாங்க அமைச்சுக்கு அனுப்பி வைக்கவும் வேண்டும்.

01.3. நெற் பயிருக்கான உர நிவாரணத்திற்கு விண்ணப்பிக்கின்ற விவசாயிகள் கீழ்காணும் தேவைப் பாடுகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

01.3.1. அவ்வப்பொழுது அரசாங்கத்தின் கொள்கைக்கு ஏற்ப விவசாயிகள் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என கடமைப்படுத்தப்பட்டுள்ள செயற்பாடுகள் ஏதும் இருக்குமாயின், அத்தகைய செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருத்தல்.

01.3.2. நெல் பயிரிடப்படும் வயல் காணி அமைந்திருக்கும் பிரதேசத்திற்கு உரிய கமக்காரர் அமைப்பின் அங்கத்துவத்தையும், நெற் பயிருக்குரிய உர நிவாரணத்தை பெற்றுக் கொள்ளும் பொருட்டு உரிய கமக்காரர் அமைப்பின் சிபாரிசையும் பெற்றிருத்தல்.

01.4. ஏதாவது ஒரு பயிர்ச் செய்கைப் போகத்தில் பெற்ற உரத்தை அந்தப் பயிர்ச் செய்கைப் போகத்தில் பாவிக்க முடியாதுள்ள சந்தர்ப்பங்களில், அது பற்றி உரிய பயிர்ச் செய்கைப் போகம் முடிவடைய முன்னர் கமநல அபிவிருத்திப் பிரதேச உத்தியோகத்தருக்கு எழுத்தில் அறிவிக்க வேண்டும். அவ்வாறு அந்தப் பயிர்ச் செய்கைப் போகத்தில் எஞ்சியிருக்கின்ற உரத்தின் அளவுகளை கழித்த பின்னரே எதிர்வரும் பயிர்ச் செய்கைப் போகத்திற்கான நிவாரண உரங்கள் விநியோகிக்கப்படும். அவ்வாறு எழுத்தில் அறிவிக்காமலிருப்பது ஒரு மோசடியான குற்றமாகும். அத்தகைய குற்றத்திற்கு எதிராக, சுற்றாடல்நேய உர மாவட்டக் குழுவினால் சட்டரீதியில் நடவடிக்கை எடுக்க முடியும்.

01.5. நிவாரண அடிப்படையில் கிடைக்கும் உரங்கள் உரிய பயிருக்கு இடப்படும் வரையான விநியோக செயற்பாட்டில் உரங்களின் இருப்புத் தொகைக்கு அந்தந்த சந்தர்ப்பத்தில் பொறுப்பு வகிக்கின்ற நிறுவனம் பொறுப்புக்கூற வேண்டும்.

01.6. நிவாரண அடிப்படையில் கிடைக்கும் உரங்கள் உரிய பயிருக்கு இடப்படும் வரை அது அரச பொதுச் சொத்து எனக் கருதி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். அரசாங்க நிவாரண அடிப்டையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் உரம் என்பது 1988 இன் 76 ஆம் இலக்க (திருத்தல்) சட்டத்தினால் திருத்தப்பட்டுள்ள 1982 இன் 12 ஆம் இலக்க பொது சொத்துக்கள் எனும் விடயத்தின் கீழ் புரியப்படும் குற்றங்கள் பற்றி குறிப்பிடுகின்ற அந்த சட்டத்தின் 12 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய 5 (அ) பிரிவின் கீழ் பொதுச் சொத்து வகுதியில் வரும் ஒரு பொதுச் சொத்தாகும். ஆகையால், நிவாரண அடிப்படையில் கிடைக்கும் உரங்களைப் பெறுகின்ற விவசாயிகள் குறித்த கருமத்திற்கு மாத்திரம் அந்த உரங்களைப் பாவிக்க வேண்டும். அவ்வாறு பாவிக்காத சந்தர்ப்பங்களில், குறித்த 1982 இன் 12 ஆம் இலக்க திருத்தல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுச் சொத்து வகுதியில் வரும் ஒரு குற்றம் எனக் கருதி, நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் என தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும், நிவாரண அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படும் உரங்கள் தொடர்பாகப் புரியப்படும் குற்றங்களை தடுக்கும் பொருட்டு பொலிஸாரால் விசாரணைகளை மேற்கொள்ளத் தேவையான ஒழுங்குகளை செய்து, அந்த விசாரணைகளுக்கும் மற்றும் சட்டநடவடிக்கைகளுக்கும் தேவையான உதவிகளைப் பெற்றுக் கொடுக்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன். இந்தக் கரும விடயத்தை தேசிய உர செயலக அலுவலகத்தின் பணிப்பாளர் மற்றும் தேசிய உர செயலக அலுவலகத்தினது மாவட்ட உதவிப் பணிப்பாளர்கள், கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்களின் உத்தியோகத்தர்கள் ஆகியோரினால் ஒன்றிணைந்து ஒத்துழைப்புடன் நிறைவேற்ற வேண்டும்.

**02. நிவாரணத்தின் அடிப்படையில் கிடைக்கும் உரங்களின் அளவுகள்**

02.1. விவசாயத் திணைக்களத்தின் கீழ் இயங்குகின்ற நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம், நெல் பயிரிடப்படும் குறித்த காணியின் அளவுகளுக்கு பாவிக்க வேண்டிய உரங்களின் அளவுகளை சிபாரிசு செய்துள்ளது. அந்த உரங்களின் அளவுகளின் சிபாரிசுகளை அடிப்படையாகக் கொண்டு உர நிவாரண நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஏற்புடையதாக்கிக் கொள்ளும் பொருட்டு நிர்ணயித்த அந்த குறித்த சிபாரிசுக்கு இணங்க தயாரித்த உரங்கள் பகிர்ந்தளிப்புத் திட்டம் விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் சிபாரிசுகள் பேரில் கமநல அபிவிருத்தி ஆணையாளரினால் வெளியிடப்படும்.

02.2. நிவாரண அடிப்படையில் உரங்களை பெற்றுக் கொள்ள உரித்துடைய விவசாயிகளுக்கு உரங்களை விநியோகிக்க வேண்டியது அந்த விவசாயிகள் பயிரிடுகின்ற வயல் காணிகளின் அளவுகளுக்கும் சிபாரிசுக்கும் இணங்க உரிய உரங்களின் அளவுகளை மாத்திரமேயாகும்.

02.3. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்த ஒரு உர சிபாரிசை பிரயோகித்தாலும் உரிய பயிர்ச் செய்கைப் போகத்தில் போஷனை பற்றாக்குறை இனங்காணப்படும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தேவையான விதத்தில் உர சிபாரிசை மாற்ற விவசாய பணிப்பாளருக்கு அதிகாரம் உண்டு. எனவே, அத்தகைய சந்தர்ப்பங்களில், குறித்த தேவையான மேலதிக உரங்களை விவசாய பணிப்பாளர் நாயகத்தினது சிபாரிசு பேரில், மாவட்டத்திற்கு பொறுப்புடைய கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளரின்/உதவி ஆணையாளரின் அனுமதியை பெற்ற பின்னர், கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தர் அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்களுக்கு கொள்வனவுக் கட்டளையை விடுக்க வேண்டும்.

**03. நிவாரண உரங்களை பெற்றுக் கொள்ளும் மற்றும் பகிர்ந்தளிக்கும் செயற்பாடு**

03.1. அரசாங்கத்தின் கொள்கைத் தீர்மானங்களுக்கு ஏற்ப விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுக்கப்படும் உரங்களை, கையாளுகையும் மற்றும் செயற்பாடும் சார்ந்த செலவுகளுக்கு அமைய கமநல சேவை நிலையங்களின் மூலம் அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்களின் ஊடாக பெற்று விவசாயிகளுக்கு விநியோகிக்க வேண்டும்.

03.2. அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்கள் பெறுகை சார்ந்த நடவடிக்கைகளை பின்பற்றி தேர்ந்தெடுத்த உள்நாட்டு விநியோகத் தரப்புகளுடன் ஒப்பந்தங்களை செய்து கொள்ள வேண்டும்.

03.3. மேற்குறித்த உள்நாட்டு விநியோகத் தரப்புகள் / உற்பத்தித் தரப்புகள் விநியோகிக்கவுள்ள உரங்கள் அளவு, கமநல சேவை அதிகாரப் பிரதேசங்கள், வீச்சளவு என்பவற்றின் அடிப்படையில் உரங்களின் இருப்புத் தொகைப் பெறுமானத்தை உள்ளிட்டு உரிய விநியோகத் தரப்புகளுக்கு ஒரு கொள்வனவுக் கட்டளை (Purchase Order) அரசாங்க உரக் கூட்டுத் தானங்கள் மூலம் விடுக்கப்படுதல் வேண்டும்.

03.4. விநியோகத் தரப்புகள் குறித்த உரங்களின் அளவுகளை விநியோகிப்பதற்கு முன்னர், உர வகுதி அடிப்படையில் உரங்கள் அவற்றின் உரிய தர நியமங்களை அனுசரித்திருக்கின்றனவா என்பதை உறுதிப்படுத்த தேசிய உர செயலக அலுவலகம் விநியோகிக்கும் அனுசரிப்பு பற்றிய சான்றிதழை கட்டாயம் பெற்றுக் கொள்ள வேண்டும். விநியோகித்த அளவுகள் தொடர்பான செலவுப்பட்டியல் விநியோகத் தரப்புகளின் மூலம் அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்களுக்கு ஒப்படைக்கப்படுதல் வேண்டும். கீழ்காணும் விடயங்கள் அந்த செலவுப்பட்டியலில் உள்ளடங்கி இருத்தலும் வேண்டும்.

வகுதி இலக்கம் (அந்த வகுதி இலக்கத்தின் நிமித்தம் தேசிய உர செயலக அலுவலகம் வழங்கிய அனுமதியை இதன் ஊடாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்) அளவுகள், கமநல சேவை அதிகாரப் பிரதேசம், வீச்சளவுகள், பெறுமானங்கள், எடுத்துச்சென்ற வாகனம், அந்த வாகனத்தின் சாரதியின் பெயர் முதலிய விபரங்கள்.

03.5. பெறுகை விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு நிபந்தனை காரணமாக உர உற்பத்தித் தரப்புக்கு, கமநல சேவை நிலையங்களுக்கு உரங்களை விநியோகிக்கும் ஒரு பொறுப்புக் கடப்பாடு இல்லாத சந்தர்ப்பங்களில், அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்கள் தேவையான உரங்களை கமநல சேவை நிலையங்களுக்கு எடுத்துச்சென்று ஒப்படைக்க வேண்டும். கையாளுகையும் செயற்பாடும் சார்ந்த செலவு இந்த அமைச்சினால் நிர்ணயிக்கப்படும். மேலே கூறப்பட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்கள் அவற்றின் சொந்த செலவுகளில் உரங்களை ஏற்றி அனுப்ப வேண்டும்.

03.6. இறக்குமதி செய்யப்படும் சகல உரங்களையும் கமநல சேவை நிலையங்களுக்கு, அந்தந்த கமநல சேவை நிலையங்களுகக்கான அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்கள் அனுப்பி வைக்க வேண்டும். கமநல சேவை நிலைய உர களஞ்சியசாலைகளிலிருந்து அல்லது விவசாயிகளுக்கு விநியோகிக்கும் மத்திய நிலையங்களிலிருந்து விவசாயிகள் பெற்றுக் கொள்ளும் உரங்களை அவர்களின் உரிய கிராமப் பகுதிகளுக்கு இலகுவாக குறைந்த செலவில் எடுத்துச்செல்ல தேவையான ஒருங்கிணைப்பு உதவியை உரிய கமக்காரர் அமைப்புகளும், விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களும், கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தர்களும் வழங்க வேண்டும். மேலும், உரிய கமக்காரர் அமைப்புகள் உரங்களை எடுத்துச் செல்வதற்காக விவசாயிகளிடமிருந்து ஏதாவது ஏற்றியிறக்கல் செலவுகளை அறவிடுவதாக இருந்தால், அதன் நிமித்தம் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் வெளியிடும் வழிகாட்டல்களுக்கு இணங்க உரிய அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

03.7. உள்நாட்டு உற்பத்தித் தரப்புகளினது உற்பத்திகளின் மூலமாக உரங்கள் விநியோகிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில், இந்த வழிகாட்டல் ஆவணத்தின் 07 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் உரங்களின் தர நியமங்கள் கட்டுப்பாடுகள் தொடர்பாக தேசிய உர செயலக அலுவலகத்தினால் விநியோகிக்கப்படும் அனுசரிப்பு சான்றிதழை பெற்றதன் பின்னர் மாத்திரமே உரிய அரசாங்க உரக் கூட்டுத் தாபனத்தினது இணக்கத்தின் பேரில் குறித்த உள்நாட்டு உற்பத்தித் தரப்புகள் முழு உரங்களையும் கமநல அபிவிருத்திப் பிராந்திய உத்தியோகத்தரினது ஒருங்கிணைப்பின் கீழ் விவசாயிகளின் மத்திய நிலையங்களுக்கு எடுத்துச்சென்று வழங்க வேண்டும். விவசாயிகளுக்கு பகிர்ந்தளித்த உரங்களின் அளவுகளுக்கு உரிய பெறுகைப் பற்றுச்சீட்டில் (GRN) விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளரும் மற்றும் கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தரும் தமது கையொப்பங்களை இட்டிருக்க வேண்டும். அதில் ஒரு பிரதியை உரிய அரசாங்க உரக் கூட்டுத் தாபனத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கவும் வேண்டும் (பொருள் ஏற்கப்படும் பற்றுச்சீட்டின் மூலப்பிரதி விநியோகத் தரப்பின் பிரதி எனவும் மற்றும் இணைப்பிரதி அரசாங்க உரக் கூட்டுத் தாபனத்தின் பிரதி எனவும் குறிப்பிடப் பட்டிருத்தல் வேண்டும்).

குறித்த அந்தக் கரும விடயத்தை, விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பிரதேசங்களில் அந்த உத்தியோக்கதரினதும் மற்றும் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் இல்லாத பிரதேசங்களில் கிராம உத்தியோகத்தர்களினதும் கண்காணிப்பில் மேற்கொள்ள வேண்டும். இத்தகைய சந்தர்ப்பத்தில் 3.8.2.9 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உர விநியோக அட்டை (அட்டவணை 01) பிரகாரம் உரங்களை விநியோகிக்க வேணடும். ஒவ்வொரு பயிர்ச் செய்கைப் போகத்திற்கும் உரிய உரங்களின் சந்தை விலைகளை தேசிய உர செயலக அலுவலகம் பொது மக்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு பிரகடனப்படுத்த வேண்டும்.

03.8. நிவாரண உரங்களுக்கு விண்ணப்பித்தல்

03.8.1. நிவாரண உரத்தை பெற்றுக் கொண்டு பகிர்ந்தளிக்க முன்வரும் கமநல சேவை நிலையம் தனது அதிகாரப் பிரதேசத்தில் பயிர்ச் செய்கைப் போகம் ஆரம்பமாகுவதற்கு ஆகக்குறைந்தது இரண்டு வாரங்களுக்கு முன்னர் உரத்திற்கான தேவையை குறிப்பிட்டு எழுத்திலான ஒரு வேண்டுகோளை அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்களுக்கு விடுக்க வேண்டும். அந்த வேண்டுகோளுக்கு இணங்க அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்கள் உரங்களை பகிர்ந்தளிக்க வேண்டும்.

03.8.2. விவசாயிகள் நிவாரண உரங்களுக்கு விண்ணப்பிக்கும் போது,

03.8.2.1. கமநல சேவை நிலையத்திற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் பெற்றுத் தரப்படுகின்ற விவசாயிகளின் பெயர்கள் அடங்கிய ஒரு பட்டியலை அடிப்படையாகக் கொண்டு மேற்குறித்த 2.1 ஆம் விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உர சிபாரிசுகளின் பேரில் விவசாயிகளுக்கு உரங்களை விநியோகிக்க வேண்டும்.

03.8.2.2. கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் கடந்த காலப் பயிர்ச் செய்கைப் போகங்களில் உரங்களை பெற்றுக் கொண்ட விவசாயிகளின் தகவல்கள் அடங்கிய பட்டியலை http://www.aginfo.agrimin.gov.lk என்ற இணையத்திலிருந்து (Link) கீழிறக்கம் செய்து கொள்ளலாம்.

03.8.2.3. விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள்/ அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் / கிராம உத்தியோகத்தர்கள்/மகாவலி பிரிவு முகாமையாளர்கள் ஆகியோர் தமது கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்குரிய விவசாயிகளின் பெயர்கள் அடங்கிய பட்டியலின் ஒரு மென்பாகப் பிரதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

03.8.2.4. அந்தப் பெயர் பட்டியலில் எவரேனும் விவசாயி ஒருவருக்குரிய நிரலின் இடது பக்கத்தில் விவசாய காலநிலை வலயம், பயிரிடப்படும் காணிகளின் அளவுகள், தேவைப்படும் உரங்களின் அளவுகள் முதலிய விபரங்களைப் பதிந்து கொள்வதற்காகவும், விவசாயினது கையொப்பத்தை / பெருவிரல் அடையாளத்தை இடுவதற்காகவும் இடைவெளி ஒதுக்கப்பட்டுள்ளது.

03.8.2.5. உரங்களை பெற்றுக் கொள்ளும் விவசாயிகளின் விபரங்கள் அடங்கிய பட்டியலின் செவ்வையை கள ரீதியான குழு உத்தியோகத்தர்கள் கையொப்பமிட்டு சான்றுபடுத்த வேணடும்.

03.8.2.6. நிவாரண உரங்களை பெறுவதற்கு தகுதியுடைய விவசாயிகளை சிபாரிசு செய்ய நியமிக்கப்படும் குறித்த கள ரீதியான குழுவில் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள், விவசாய ஆலோசகர்கள், கமநல சேவை நிலையங்களுக்கு இணைத்துள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கமக்காரர் அமைப்புகளின் தலைவர்கள் / செயலாளர்கள் ஆகியோர் உள்ளடங்கியிருக்க வேண்டும்.

03.8.2.6.1. விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் இல்லாத பிரதேசங்களில் அந்த விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களுக்கு பதிலாக கிராம உத்தியோகத்தர்களைப் பிரதியீடு செய்ய வேண்டும்.

03.8.2.6.2. மகாவலி அதிகாரப் பிரதேசங்களாயின் மேற்குறித்த 3.8.2.6 இல் குறிப்பிடப்பட்டுள்ள கமநல சேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்குப் பதிலாக மகாவலிப் பிரிவு முகாமையாளர்களையும் குறித்த களரீதியான இந்தக் குழுவின் அங்கத்தவர்களாக உள்ளடக்க வேண்டும்.

03.8.2.7. எவரேனும் விவசாயி ஒருவர் நிவாரண உரங்களுக்கு விண்ணப்பிக்கின்ற போது மேற்குறித்த பெயர் பட்டியலில் அந்த விவசாயி பற்றிய விபரங்களை சரியாக உள்ளடக்கிய பின்னர் அந்த விவசாயினது கையொப்பத்தை பெற்றுக் கொள்ள வேண்டும்.

03.8.2.8. மேற்குறித்த 3.8.2.6 இல் கள ரீதியான உத்தியோகத்தர் பெற்றுத்தரும் விபரங்களை கமநல சேவை நிலையத்திலுள்ள கணனியில் உள்ளீர்க்க வேண்டும்.

03.8.2.9. உரிய விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள், விவசாயிகள் உரங்களை பெற்றுக் கொள்ளத் தேவையான பெறுகை அட்டையை (அட்டவணை 03) அந்த விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். அந்த பெறுகை அட்டையை உரிய கமநல சேவை நிலையத்திற்கு பெற்றுக் கொடுத்து விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளருக்கு (வி.ஆ.உ.உ.) ஒப்படைத்த பின்னர் அவருக்கு தேவையான உரங்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். விவசாயிகளுக்கு இலவசமாக உரங்களை விநியோகிக்கும் போது இலக்கங்களுடைய முறையான ஒரு பெறுகை அட்டையை (அட்டவணை 02) பெற்றுக் கொடுக்க வேண்டும். குறித்த அந்த அட்டையில் விவசாயின் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், DO குறியீட்டு இலக்கம், உர வகைகள் மற்றும் உரங்களின் அளவுகள் முதலிய விபரங்களை குறிப்பிட்டு உரங்களை விநியோகிக்கும் உத்தியோகத்தர் தனது பெயரை பதிந்து கையொப்பத்தையும் திகதியையும் இட்டு தனது நிறுவனத்தின் அலுவலக முத்திரை இட்டு 'இலவசமாக விநியோகிக்கப்பட்டது' என குறிப்பிடுதல் வேண்டும்.

03.8.2.10. மேற்குறித்த 3.8.2.8 இல் குறிப்பிடப்பட்டுள்ள உரிய விபரங்களை ஒவ்வொரு மாத முடிவிலும் தரவுத் தளத்தில் உள்ளீர்க்கும் முகமாக கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தர் கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்திற்கு வழங்க வேண்டும். மாவட்டத்திற்கு பொறுப்புடைய கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளர்கள்/உதவி ஆணையாளர்கள் அந்த ஒவ்வொரு மாதத்தினதும் முன்னேற்றத்தை http://www.aginfo.agrimin.gov.lk எனும் இணையத்தள வசதியை பயன்படுத்தி உரிய குறித்த மாதம் முடிவடைந்து பத்து (10) நாட்களுக்குள் தரவுத் தளத்தினுள் உள்ளீர்க்க வேண்டும். அவ்வாறு அந்த உரிய முறையில் விபரங்களை பெற்றுத் தராத கமநல சேவை நிலையங்களை இனங்கண்டு மாவட்ட கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளர்கள் / உதவி ஆணையாளர்கள் தேவையான உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். தேவையாயின், உரிய விபரங்களை பெற்றுத் தரும் வரை உரிய கமநல சேவை நிலையத்திற்கு உரங்களைப் பகிர்ந்தளிக்காமல் தற்காலிகமாக இடைநிறுத்தவும் முடியும்.

03.8.2.11. குறித்த தரவுத் தளத்தினுள் இது வரை உள்ளீர்க்கப்படாத விவசாயிகள் நிவாரண உரங்களுக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பங்களில் அந்த விவசாயிகளின் விபரங்களை புதிதாக தரவுத் தளத்தினுள் உள்ளீர்க்க முடியும் என்றாலும், அவ்வாறு செய்ய முன்னர் உரிய விவசாயிடமிருந்து உரத்திற்கான விண்ணப்பப் படிவத்தை (அட்டவணை 03) பெற்றுக் கொண்டு அந்த விவசாயி நிவாரண உரங்களை தகுதியுடையவர் என மேற்குறித்த கள ரீதியான குழுவினது சிபாரிசின் பேரில் கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தர் தனது கையொப்பத்தை இட்டு உறுதிப்படுத்த வேண்டும்.

03.8.2.12. புதிய விவசாயிகளின் பெயர்கள் அடங்கிய ஒரு பட்டியலை மாவட்ட கமநல அபிவிருத்தி பிராந்திய / உதவி ஆணையாளர்களின் சிபாரிசுகளுடன் தரவுத் தளத்தில் உள்ளீர்க்க வேண்டும்.

03.9. நிவாரண அடிப்படையில் உரங்களைப் பெற்றுக் கொள்ள உரித்துடைய விவசாயிகள் தொடர்பான விபரங்களை, விவசாய ஆராய்ச்சி மற்றும் விவசாய உற்பத்தி உதவியாளர்கள் அல்லது அந்த உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படாத பிரதேசங்களில் உரங்களை பகிர்ந்தளிக்கும் செயற்பாட்டை ஒருங்கிணைக்க நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களினால் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

03.10. நெற் பயிருக்கான உர சிபாரிசுகளின் பிரகாரம் விவசாயிகள் உரங்களுக்கு விண்ணப்பிப்பதையும் மற்றும் விவசாயிகள் சரியான உர அளவுகளைப் பெற்றுக் கொண்டு நெற் பயிருக்கு இடுவதையும் உறுதிசெய்து கொள்ளத் தேவையான ஒரு வேலைத் திட்டத்தை விவசாய ஆலோசகர்கள்/விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் தயாரித்து செயற்படுத்த வேண்டும்.

03.11. உரங்களின் நிமித்தம் விவசாயிகள் சமர்ப்பிக்கும் விண்ணப்பப் படிவங்களில் குறிப்பிடப் பட்டுள்ள விபரங்களின் செவ்வைத் தன்மையை பரிசீலித்து, உறுதிப்படுத்திக்கொண்டு அந்த விவசாயிகளின் பெயர்கள், பயிரிடப்படும் வயல் காணிகளின் பெயர்கள் மற்றும் பயிரிடப்படும் அளவுகள் மற்றும் அந்தக் காணிகளுக்கு உரித்துடைய உரங்களின் அளவுகள் முதலிய விபரங்கள் அடங்கிய ஒரு பட்டியலை அந்தந்த அதிகாரப் பிரதேசத்திற்கான குறித்த விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் அல்லது அத்தகைய உற்பத்தி உதவியாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படாதுள்ள பிரதேசங்களில் உரிய உத்தியோகத்தர்கள் தயாரித்து கிராம உத்தியோகத்தர் அலுவலகம் மற்றும் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் அலுவலகம், கமக்காரர் அமைப்புகளின் தலைவர்களினது இல்லங்கள் அல்லது அலுவலகம் மற்றும் மகாவலி பிரதேச வலய முகாமையாளர் அலுவலகம் போன்ற இடங்களில் காட்சிப்படுத்த வேண்டும்.

03.12. மேற்குறித்த இந்தப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள விபரங்களுக்கு எதிராக பொது மக்களிடம் இருந்து கிடைக்கின்ற முறைப்பாடுகளை விசாரித்து, செவ்வைத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான ஒரு வேலைத் திட்டத்தை செயற்படுத்தும் முகமாக கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தர்கள், விவசாய ஆலோசகர்கள் மற்றும் மகாவலிப் பிரதேச பிரிவு முகாமையாளர்கள் ஆகியோர் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

03.13. மகாவலி அதிகார பிரதேசங்களில் நிவாரண உரங்களுக்கு உரித்துடைய விவசாயிகளின் பெயர்கள் அடங்கிய ஒரு பட்டியலை, விவசாயினது பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், வயல் காணி அளவுகள் (ஹெக்டேயர்களில்), வயல் காணிகளின் அமைவிடங்கள் என்பவற்றை நிச்சயப்படுத்திக் கொள்ளக் கூடிய விபரங்கள், விவசாயினது தொலைபேசி இலக்கம் மற்றும் உரிய உரங்களின் அளவுகள் என்பன உள்ளடங்கும் வகையில் மகாவலி வயல முகாமையாளர்கள் தயாரித்து தமது கையொப்பங்களையும் மற்றும் அலுவலக முத்திரையையும் இட்டு, அதன் செவ்வைத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு குறித்த மகாவலிக் கோட்டப் பிரிவு முகாமையாளரினதும் கையொப்பத்தை பெற்ற பின்னர் அலுவலக முத்திரையை இடச்செய்து உரிய கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும். அந்தப் பெயர் பட்டியலின் பிரதிகளை கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயத்திற்கும் மற்றும் தேசிய உர செயலக அலுவலகத்தினது பணிப்பாளருக்கும் அனுப்பி வைக்க வேண்டும்.

## 04. விவசாயிகளுக்கு நிவாரண அடிப்படையில் உரங்களை விநியோகித்தல்

04.1. 1988 இன் 68 ஆம் இலக்க உரங்கள் ஒழுங்குறுத்துகை சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம், தனது பயிரிடும் காணிக்கு சட்டமுறையாக உரித்துடைய உரங்களின் அளவுகளை விடவும் அதிக அளவு உரங்களை அல்லது உரிய அளவான உரங்களை ஒரு வருடத்திற்கு அதிக காலம் தனது உடைமயில் வைத்திருப்பது சட்டவிரோதமான ஒரு செயலாகும்.

04.2. நிவாரண உரங்களை பெற்றுக் கொள்ள உரித்துடைய சகல விவசாயிகளும் எதிர்வருகின்ற பயிர்ச் செய்கைப் போகத்திற்கு தேவையான உரங்களின் நிமித்தம் விண்ணப்பிக்கும் போது கடந்த பயிர்ச் செகைப் போகத்திற்கு பெற்றுக் கொண்டதன் பின்னர் ஏதாவது ஒரு காரணத்தினால் பயிர்களுக்கு இடாமல் எஞ்சியிருக்கின்ற உரங்களின் அளவுகளை குறிப்பிடுதல் வேண்டும். எதிர்வருகின்ற பயிர்ச் போகத்திற்கு உரித்துடைய உரங்களின் அளவுகளிலிருந்து கடந்த பயிர்ச் செய்கைப் போகத்தில் எஞ்சியிருக்கும் அளவுகளை கழித்த பின்னர் வருகின்ற வித்தியாமான அளவுகளுக்கு மாத்திரமே விவசாயிகளுக்கு உரங்களை விநியோகிக்க வேண்டும்.

04.3. எவரேனும் விவசாயி ஒருவர் ஒரே பயிர்ச் செய்கைப் போகத்தில் பெரும் நீர்ப்பாசனம், சிறிய நீர்ப்பாசனம் மற்றும் மழை நீர் முதலிய ஒரு நீப்பாசன முறைமைக்கு அதிகமான முறைமைகளில் வெவ்வேறாக நெல்லை பயிரிடுகின்ற சந்தர்ப்பங்களில், அந்த விவசாயி பயிரிடும் மொத்தக் காணி அளவு இரண்டு (02) ஹெக்டேயர்களை (05 ஏக்கர்கள்) விஞ்சாத வகையில் ஒரு தடவைக்கு அதிகமான தடவைகளில் நிவாரண உரங்களுக்கு விண்ணப்பிக்கலாம் (ஒரு தடவைக்கு அதிகமான தடவைகள் அந்த விவசாயினது பெயரை, குறித்த பெயர் பட்டியலில் உள்ளடக்கலாம்). ஆயினும் அத்தகைய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அந்த விவசாயினது தேசிய அடையாள அட்டை இலக்கமும் மற்றும் DO தொடர் இலக்கமும் ஒரே மாதிரியாக இருத்தல் வேண்டும். எவரேனும் விவசாயி ஒருவர் இதற்கு முந்திய பயிர்ச் செய்கைப் போகத்தில் உர நிவாரணத்தின் நிமித்தம் பதிவு செய்து அவரது விபரம்

தரவு தரத்தில் உள்ளீர்க்கப்பட்டிருக்குமாயின், அந்த விவசாயிடமிருந்து புதிய ஒரு விண்ணப்பத்தை பெற்றுக் கொள்ள அவசியமில்லை. அந்த விவசாயினது DO தொடர் இலக்கம் அடங்கலாக ஏனைய தேவையான விபரங்களை மாதிரிப் படிவத்தில் குறிப்பிடுவது போதுமானதாகும்.

04.4. குறித்த மகாவலி வலய முகாமையாளர் தயாரித்து கையொப்பத்தையும் அலுவலக முத்திரையும் இட்டு செவ்வைத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளும் முகமாக அந்த மகாவலி கோட்டப் பிரிவு முகாமையாளரினது கையொப்பத்தை பெற்று அவரது அலுவலக முத்திரையை இடச்செய்து கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள விவசாயிகளின் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், வயல் காணிகளின் அளவுகள் (ஹெக்டேயர்களில்), அமைவிடங்கள் முதலியவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடிய தகவல், தொலைபேசி இலக்கம் மற்றும் உரிய உரங்களின் அளவுகள் என்பன அடங்கிய ஒரு பட்டியலின் அடிப்படையில், மகாவலி அதிகாரப் பிரதேசங்களில் நிவாரண உரங்களுக்கு உரித்துடைய விவசாயிகளுக்கு, உரங்களை விநியோகிக்க வேண்டும்.

04.5. ஒவ்வொரு கமநல சேவை நிலையமும் உரிய பயிர்ச் செய்கைப் போகத்தில் நெற் பயிருக்கு தேவையான நிவாரண உரங்கள் விநியோகிக்கப்படும் விவசாயிகளின் பெயர்கள் அடங்கிய ஒரு பட்டியலைத் தயாரித்து பேண வேண்டும். அதில் உரங்களை பெற்ற விவசாயிகளின் பெயர்கள், தேசிய அடையாள அட்டை இலக்கங்கள், வயல் காணியின் அளவுகள் (ஹெக்டேயர்களில்), பெற்றுக் கொடுத்த உரங்களின் அளவுகள் மற்றும் அந்த அளவான உரங்களைப் பெற்றுக் கொண்டமையை உறுதிப்படுத்த விவசாயிகள் இட்டுள்ள கையொப்பங்கள் அல்லது அந்த விவசாயிகளின் பெருவிரல் அடையாளங்கள் மற்றும் விவசாயிகளின் தொலைபேசி இலக்கங்கள் என்பன போன்ற விபரங்கள் உள்ளடக்க வேண்டும். நிவாரண உரங்கள் சம்பந்தமான எந்த ஒரு விடயமாகவிருந்தாலும் சரி அதனுடன் தொடர்புடைய நிறுவனங்கள் அந்தப் பட்டியலை வழங்குமாறு கேட்டுக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் அதனை பெற்றுக் கொடுப்பது கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தர்களின் பொறுப்பாகும்.

04.6. நெல்லை பயிரிடும் எவரேனும் விவசாயி ஒருவர் அல்லது விவசாயிகள் குழு, சிபாரிசு செய்யப் பட்டுள்ள உரங்களின் அளவுகளை விடவும் குறைந்தளவான உரங்களுக்கு விண்ணப்பிக்கும் போது, விவசாய விரிவாக்கல் உத்தியோகத்தர் ஒருவரின் சிபாரிசு பேரில், அவ்வாறு விண்ணப்பிக்கப்படும் உரங்களின் அளவுகளை பெற்றுக் கொடுக்கலாம். அவ்வாறு குறைந்தளவில் விண்ணப்பிக்கும் போது, விண்ணப்பிக்கப்படும் அந்த அளவுகளை உர அட்டவணையில் உரிய விவசாயின் பெயருக்கு எதிரே குறிப்பிடுதல் வேண்டும். சிபாரிசு செய்யப்பட்டுள்ள அந்த அளவுகளுக்கு குறைந்தளவான உரங்களின் நிமித்தம் விண்ணபித்துள்ள விவசாயிகளின் பெயர்கள் உள்ளடங்கிய ஒரு பட்டியலை, அவ்வாறு விண்ணபித்த உரங்களின் அளவுகளை உள்ளடக்கி கமநல சேவை நிலைய மட்டத்தில் வெவ்வேறாக தயாரித்து கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்ப வேண்டும்.

**05. நிவாரண அடிப்படையில் உரங்களை பகிர்ந்தளிப்பதற்கு தயாரிக்கப்பட்டுள்ள திட்டத்தை உபயோகித்தல்**

05.1. உரங்களை பகிர்ந்தளிக்கும் திட்டம் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினால் தேசிய உர செயலக அலுவலகத்தின் பணிப்பாளரினதும் மற்றும் விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினதும் அவதானிப்புகள் மற்றும் சிபாரிசுகள் அடிப்படையில் தயாரித்து வெளியிடப்படும். அந்த திட்டம் www.aginfo.agrimin.gov.lk என்ற இணையத் தளத்தில் பிரசுரிக்கப்படும்.

05.1.1. இந்த உரங்கள் பகிர்ந்தளிப்பு திட்டத்தை தயாரிக்கும் போது எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அந்தந்த கமநல சேவை அதிகாரப் பிரதேசங்களில் விளைச்சல்கள் செய்யப்பட்டுள்ள முழுமையான வயல் காணிகளின் அளவுகளை விஞ்ஞாத வகையில் தயாரித்துக்கொள்ள வேண்டும். புதிதாக விளைச்சல் செய்ததன் காரணமாக முழுமையான வயல் காணிகளின் அளவுகள் அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் அதன் நிமித்தம் கமநல ஆணையாளர் நாயகத்தின் முன்கூட்டிய அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டும்.

05.2. உரங்களை பகிர்ந்தளிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள திட்டத்தை மாவட்டத்தினுள் முறையாக செயற்படுத்தும் பொறுப்பு சுற்றாடல்நேய உர மாவட்ட செயல் குழுவுக்கு சாட்டப்படுகின்றது. அதன் போது,

05.2.1. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எதிர்வருகின்ற பயிர்ச் செய்கைப் போகங்களில் ஒதுக்கப்பட்டுள்ள உரங்களின் அளவுகளை விஞ்சாத மற்றும் மாவட்டத்தினுள் உரங்களுக்கு பற்றாக்குறை ஏற்படாத வகையில் ஒரு கட்டுப்பாட்டுடன் உரங்களை பகிர்ந்தளிக்கும் செயற்பாட்டை சுற்றாடல்நேய உர மாவட்ட செயல் குழு மேற்கொள்ள வேண்டும்.

05.2.2. ஒவ்வொரு கமநல சேவை நிலையத்திற்கும் எதிர்வருகின்ற பயிர்ச் செய்கைப் போகத்தினுள் அதற்கு என ஒதுக்கப்பட்டுள்ள உரங்களின் அளவுகளில் 80% வீதத்தை விஞ்சாத மற்றும் உரங்கள் பகிர்ந்தளிக்கும் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை மீறாத வகையில், கொள்வனவு கட்டளையை விடுத்து, உரங்களை களஞ்சியசாலைகளிலிருந்து நேரடியாக பெற்றுக் கொள்ளலாம்.

05.2.3. ஏதாவது ஒரு கமநல சேவை நிலையம், அதன் அதிகாரப் பிரதேசத்திற்கு என ஒதுக்கப்பட்டுள்ள உரங்களின் அளவுகளில் 80% வீதத்தை பெற்றுக் கொண்டதன் பின்னர் எஞ்சிய 20% வீதத்திற்கு அல்லது அதன் ஒரு பாகத்திற்கு கொள்வனவு கட்டளையை விடுக்கின்ற சந்தர்ப்பங்களில், அதன் நிமித்தம் அந்த கமநல சேவை நிலையம் சுற்றாடல்நேய உர மாவட்ட செயல் குழுவின் சிபாரிசை கட்டாயம் பெற்றுக் கொள்ள வேண்டும். அந்த சிபாரிசு அந்த செயல் குழுவின் தலைவரான மாவட்ட செயலாளர், தேசிய உர செயலக அலுவலகத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் அல்லது மாவட்ட செயலாளர் அதிகாரம் அளிக்கும், குழுவின் வேறொரு உறுப்பினர் ஆகியேகாரினால் கள ரீதியான

ஒரு பரிசீலனையின் பின்னர் பெற்றுக் கொடுக்கப்படுதல் வேண்டும். இந்த வேண்டுகோள் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினாலும் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

05.2.4. ஏதாவது ஒரு பயிர்ச் செய்கைப் போகத்தில் உரங்கள் பகிர்ந்தளிக்கும் திட்டம் அந்தந்த கமநல சேவை நிலையங்களுக்கு ஒதுக்கப்பட்ட உரங்களின் அளவுகளை விஞ்சி உரங்கள் தேவைப்படும் சந்தர்ப்பங்களில், அது ஒரு மேலதிக உரங்கள் தேவைப்பாடாக கருதி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். அதன் நிமித்தம், இந்த சுற்றறிக்கையின் 06 பந்தியில் குறிப்பிடப்பட்ட நடைமுறைகள் பின்பற்றப்படுதல் வேண்டும்.

05.2.5. நெற் பயிர்ச் செய்கையின் நிமித்தம் பயிர்ச் செய்கைப் போகக் கூட்டங்கள் நடத்தப்படும் போது எடுக்கப்படும் தீர்மானங்களை பின்பற்றி நடந்து கொள்ளும் விவசாயிகளும் அல்லது இரண்டு ஹெக்டேயர்களுக்கு அதிகமான காணிகளில் நெல்லை பயிரிடுகின்ற விவசாயிகளும், பயிர்ச் செய்கைப் போகக் கூட்டங்களில் எடுத்த தீர்மானங்களின் பிரகாரம் வயல் காணிகளில் ஏனைய பயிர்களை பயிரிடுகின்ற விவசாயிகளும் திறந்த சந்தை விலைகளில் உரங்களை பெற்றுக் கொள்ள வேண்டும்.

**06. மேலதிக உரங்களுக்கு விண்ணப்பித்தல்**

06.1. உரங்கள் பகிர்ந்தளிப்பு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வயல் காணிகளின் அளவுகளை விஞ்சி நெல் பயிரிடப்படுகின்ற, இரண்டு ஹெக்டேயர்கள் வரையான காணிகளுக்கு மாத்திரம் மேலதிக உரங்களின் நிமித்தம் விண்ணப்பிக்கலாம். அவ்வாறு விண்ணப்பிக்கும் போது விவசாயிகள் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

06.2. அநேகமான பயிர்ச் செய்கைப் போகங்களில் கமநல சேவை நிலையங்கள் அதிக பயிர்ச் செய்கை இலக்குகளுக்கு ஏற்ப அதிகளவு உரங்களுக்கு விண்ணப்பித்திருந்தாலும், அந்தப் பயிர்ச் செய்கைப் போக இறுதியில் குறித்த இலக்குகளை அடையத் தவறியுள்ளமையும் மற்றும் பயிர் முன்னேற்ற இலக்குகளுக்கு கணிசமான அளவு குறைந்த இலக்குகள் காணப்படுகின்றமையும் அவதானிக்கப் பட்டுள்ளன.

06.3. கடந்த 5 பயிர்ச் செய்கைப் போகங்களில் (சிறுபோகம் அல்லது பெரும்போகம் என ஏற்புடையவாறு) பயிரிடப்பட்டுள்ள ஆகக்கூடிய வயல் காணிகளின் அளவுகளையும் மற்றும் விவசாய பணிப்பாளர் நாயகத்தின் சிபாரிசுகளையும் அடிப்படையாகக் கொண்டு உரிய பயிர்ச் செய்கைப் போகத்திற்கு தேவையான உரங்களை இனங்கண்டு உரங்கள் பகிர்ந்தளிக்கும் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

06.4. கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம், விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் சிபாரிசுகளின் பேரில் அந்தந்த பயிர்ச் செய்கைப் போகங்களுக்கு என தயாரித்து வெளியிடுகின்ற உரங்கள் பகிர்ந்தளிப்பு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளை விடவும் மேலதிகமாக உரங்கள் தேவை என உணரப்படும் சந்தர்ப்பங்களில் கமநல அபிவிருத்திப் பிராந்திய உத்தியோகத்தர்கள் அல்லது விவசாய ஆலோசகர்கள் கூட்டுப் பொறுப்புடன் இதில் காணப்படுகின்ற அட்டவணை 04 இல் தரப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தி கையொப்பத்தையும் மற்றும் அலுவலக முத்திரையும் இட்டு உரிய மாவட்டத்திற்கு பொறுப்புடைய கமநல அபிவிருத்திப் பிரதி / உதவி ஆணையாளர்கள் மூலம் மாவட்ட உர ஒருங்கிணைப்புக் குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

06.5. மேலதிகமாக தேவைப்படும் உரங்களின் நிமித்தம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் போது கமநல அபிவிருத்திப் பிராந்திய உத்தியோகத்தர் அல்லது விவசாய ஆலோசகர் கீழ்காணும் விடயங்களை மிகவும் விரிவாக கருத்திற் கொள்ள வேண்டும்.

06.5.1. மேலதிக உரங்களுக்கான விண்ணப்பப் படிவங்களை சரியாக பூரணப்படுத்தி அலுவலக முத்திரை இடப்பட்டுள்ளமை.

06.5.1.1. வயல் காணியானது, பெரும் நீர்ப்பாசனம், சிறிய நீர்ப்பாசனம் மற்றும் மழை நீர் ஆகிய நீர்ப்பான முறைமைகளுக்கு ஏற்ப வேறுபடுத்தி காட்டப்பட்டிருத்தல்.

06.5.1.2. வயல் காணிகளின் அளவுகளை ஹெக்டேயர்களில் மாத்திரம் குறிப்பிட்டிருத்தல்.

06.5.2. தேவையான மேலதிக உரங்களின் நிமித்தம் மாவட்ட உர ஒருங்கிணைப்புக் குழுவின் இணக்கத்தை பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் விண்ணப்பப் படிவங்களை நேர காலத்தோடு மாவட்டத்திற்கு பொறுப்புடைய கமநல அபிவிருத்திப் பிராந்திய / உதவி ஆணையாளர்களிடம் சமர்ப்பித்திருத்தல்.

06.5.3. மேலதிகமாக பெற்றுக் கொடுக்கப்படும் உரங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் விவசாயிகளின் பெயர்கள், தேசிய அடையாள அட்டை இலக்கங்கள், பயிரிடப்படும் காணிகளின் அளவுகள் (ஹெக்டேயர்களில்), தொடர்புகொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கங்கள் மற்றும் கையொப்பங்கள் போன்ற விடயங்கள் உள்ளடங்கிய ஒரு பட்டியலை உரிய பிரிவினது விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் தயாரித்து கையொப்பமிட்டு உரிய கமநல சேவை நிலைய அதிகார பிரதேசத்தின் கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தரின் சிபாரிசுகளுடன் சமர்ப்பிக்க (அட்டவணை 05) வேண்டும்.

06.5.4. தேசிய உர செயலக அலுவலகத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் அல்லது மாவட்ட கமநல அபிவிருத்திப் பிரதி / உதவி ஆணையாளர் அல்லது அவர் நியமிக்கின்ற மாவட்ட அலுவலகத்தின் பிரதிநிதிகள் கள ரீதியான ஒரு பரிசீலனையை (உரக் களஞ்சியங்கள் அடங்கலாக) மேற்கொண்டு மேலதிக உரங்களை பெற்றுக் கொள்வதற்குத் தகுதி உண்டு என வழங்கிய ஒரு சிபாரிசுக் கடிதம் இணைக்கப்பட்டிருத்தல்.

06.6. மேலதிக உரங்களுக்கான விண்ணப்பப் படிவங்களில் குறிப்பிடப்பட்ட விபரங்களின் செவ்வைத் தன்மைக்கு அந்த கோரல் தொடர்பாக விண்ணப்பிக்கின்ற உத்தியோகத்தரும், சிபாரிசு செய்கின்ற உத்தியோகத்தரும் மற்றும் குறித்த குழுவும் கட்டாயம் பொறுப்புக்கூற வேண்டும்.

06.7. சுற்றாடல்நேய உர மாவட்ட செயல் குழு அனுமதிக்கும் உரங்களின் அளவுகள் பற்றிய விபரங்கள் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் மற்றும் விவசாய ஆலோசகர்களும் உரிய அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்களுக்கும் மற்றும் குறித்த தரப்பு நிறுவனங்களுக்கும் எழுத்தில் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

06.8. மேலதிக உரங்களை பெற்றுக் கொள்வதற்காக அனுமதிக்கும் கடிதத்தை குறித்த அட்டவணை 06 பிரகாரம் தயாரித்து கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும்.

06.9. மேலதிக உரங்களின் நிமித்தம் விண்ணப்பிக்கப்படும் சந்தர்ப்பங்களில் உண்மையான தேவையின் அடிப்படையில் ஒரு கட்டுப்பாட்டுடன் உரங்களை அந்தந்த மாவட்டக் கமநல அபிவிருத்திப் பிரதி / உதவி ஆணையாளரின் / தேசிய உர செயலக அலுவலகத்தினது மாவட்ட உதவிப் பணிப்பாளரின் சரியான மேற்பார்வையில் பகிர்ந்தளிப்பது அவசியமாகும்.

**07. உரங்களின் தர நியமங்கள் கட்டுப்பாடு**

07.1. உரம் என்பது 'அங்கீகரிக்கப்பட்டுள்ள தாவர போஷனை ஒன்று அல்லது அதற்கு அதிகமான தாவர போஷனைகள் அடங்கிய தாவர போஷனை உள்ளடங்கியிருப்பதன் காரணமாக பாவிக்கப்படும் தாவரங்களின் வளர்ச்சிக்கு பாவிப்பதற்கான நோக்கமுடைய, இல்லையெனில் அதற்கான ஒரு பெறுமானத்தையுடையது என சொல்லப்படுகின்ற ஏதாவது ஒரு பதார்த்தம்' எனப் பொருள்படும். 'சுத்திகரிக்கப்படாத விலங்கு அல்லது தாவர உரங்கள்' இதில் உள்ளடங்காது (தகவல்மூலம்: 1988 இன் 68-ஆம் இலக்க உரங்கள் ஒழுங்குறுத்துகை சட்டம்).

07.2. தேசன உரங்களை, அடிப்படை ரீதியில் மூன்று வகைகளாக இனங்காண முடியும். அதாவது திண்ம சேதன உரம், திரவ சேதன உரம் மற்றும் உயிரியல் (உயிர்) உரம் என்பனவாகும்.

07.2.1. திண்ம சேதன உரம் என்பது தாவரத்தின் வளர்ச்சியை அல்லது உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு உதவும், ஒன்று அல்லது அதற்கு அதிகமான தாவர போஷனைகள் உள்ளடங்கிய, தாவரப் பாகங்கள் அல்லது விலங்கு பாகங்கள் அல்லது இயற்கை கனிப்பொருட்கள் அல்லது இவற்றில் ஏதாவது ஒன்று அல்லது அதற்கு அதிகமானவை உள்ளடங்கிய, பொதீக செயல்முறையால் சிதைந்த மண் வளத்தை அல்லது ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கு உதவுகின்ற ஒரு பதார்த்தம் எனப் பொருள்படும்.

07.2.2. திரவ உரம் என்பது தாவரத்தின் வளர்ச்சியை அல்லது உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு உதவும், ஒன்று அல்லது அதற்கு அதிகமான தாவர போஷனைகள் உள்ளடங்கிய, தாவரப் பாகங்கள் அல்லது விலங்குப் பாகங்கள் அல்லது இவற்றில் ஒன்று அல்லது அதற்கு அதிக செரிமான செயல்முறைக்கு உட்படும் மற்றும் புரத ஹைட்ரஷலேட்டு (Protine Hydrolysate) தொழில் நுட்பத்தை பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்ற திரவ உரம் எனப் பொருள்படும்.

07.2.3. உயிரியல் உரம் என்பது ஒரு திண்ம அல்லது விஷேட கரைசலை பயன்படுத்தி அதில் அடங்க வேண்டிய விவசாயத்திற்கு பயனுள்ளதாக புவிமண்டல நைதரசனை நிரல்படுத்தி, மண்ணிலுள்ள பொசுபரஸை அல்லது மண்ணிலுள்ள போஷனை பதார்த்தங்களை தாவரங்கள் உருஞ்சக்கூடிய வகையில் மாற்றுதல் முதலிய செயற்பாடுகளுக்குப் பயன்படும் மண்ணின் அல்லது தாவரங்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு பயன்படக் கூடிய உயிரியல் நிலையிலுள்ள ஒரு உற்பத்தி எனப் பொருள்படும்.

07.3. உள்நாட்டு உற்பத்தித் தரப்புகள் உற்பத்தி செய்கின்ற உரங்களுக்கு இடையில் கொம்போஸ்ட்டு மற்றும் திரவ சேதன உரம் ஆகிய உரங்களுக்கு இலங்கை தர நியமங்கள் கட்டளைகள் நிறுவகம் நிர்ணயித்து பிரகடனப்படுத்திய தர நியமங்கள் அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றன. இலங்கை தர நியமங்கள் கட்டளைகள் நிறுவகம் நைதரசன் தொடர்பாக சிபாரிசு செய்துள்ள ஆகக்குறைந்த விகிதம், விவசாய பணிப்பாளர் நாயகம் அனுமதித்துள்ள ஆகக்குறைந்த சிபாரிசின் பிரகாரம் 1.5% வீதம் என மாற்றப்பட்டு பிரயோகிக்கப்படுகின்றது. இது தவிர, இறக்குமதி செய்யப்படும் இயற்கை கனியப் பொட்டாசியம் குளோரைட்டு (KCl) மற்றும் விஷேட உரங்கள் என்பவற்றுக்கு இலங்கை தர நியமங்கள் கட்டளைகள் நிறுவகம் நிர்ணயித்து பிரகடனப்படுத்தியுள்ள கீழ்காணும் நியமங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

i. கொம்போஸ்ட்டு உரம் - இலங்கைத் தர நியமம் 1635:2019 (அட்டவணை 07)

ii. திரவ சேதன உரம் - இலங்கைத் தர நியமம் 1702:2021 (அட்டவணை 08)

iii. உயிரியல் உரம் - நெற் பயிருக்கு சுற்றாடல்நேய உரங்களை விநியோகிப்பதற்கான கேள்வி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தர நியமங்கள் (அட்டவணை 09)

iv. விஷேட உரம் - இலங்கைத் தர நியமங்கள் கட்டளைகள் நிறுவகம் வரையறுத்துள்ள தர நியமங்கள் உரிய விதத்தில் பிரயோகிக்கப்படுகின்றன (அட்டவணை 10)

v. இயற்கை கனிய பொட்டாசியம் குளோரைட்டு (KCL) - இலங்கைத் தர நியமம் 644:2014 (அட்டவணை 11)

07.4. பகிர்ந்தளிக்கப்படுகின்ற உரங்கள் மேற்குறித்த தர நியமங்களை அனுசரிக்கின்றனவா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்கள் ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கு அமைய, உரிய உரங்களின் அளவுகளை பகிர்ந்தளிக்க முன்னர் ஒவ்வொரு உரத் தொகுதிக்கும் தேசிய உர செயலக அலுவலகத்தின் பணிப்பாளர் வழங்கும் அனுசரிப்பு சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கும் அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேசிய உர செயலக அலுவலகத்தின் பணிப்பாளர் வழங்கும் ஒரு அனுசரிப்பு சான்றிதழ் இன்றி எந்த ஒரு உரத்தையும் விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு இடமளிக்கக் கூடாது.

07.5. உரங்களின் தர நியமங்களை கட்டுப்படுத்துவது பற்றி அந்தந்த நிறுவனத்தின் / சுற்றாடல்நேய உர மாவட்ட செயல் குழுவின் கடமைகளும் மற்றும் பொறுப்புக்களும் பின்வருமாறு:

07.5.1. தேசிய உர செயலக அலுவலகம்

07.5.1.1. 1988 இன் 68 ஆம் இலக்க உரங்கள் ஒழுங்குறுத்துகை சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்ற உர உற்பத்தித் தரப்புகளுக்கு அந்த அனுமதிப்பத்திரங்களின் மூலம் உர உற்பத்தி நிமித்தம் அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. உர உற்பத்திகளின் தர நியமங்களை தொகுதி வாரியாக பரிசீலிப்பதும் அந்தத் தொகுதிகளுக்குரிய அனுசரிப்பு சான்றிதழ்களை வழங்குவதும் தேசிய உர செயலக அலுவலகத்தின் பொறுப்பாகும்.

07.5.1.2. ஆகையால், அந்த அனுசரிப்பு சான்றிதழ் இல்லாத எந்த ஒரு உரத் தொகுதிக்கும் உரிய உரங்களை அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்கள் கொள்வனவு செய்யக் கூடாது. சந்தையில், அந்த அனுசரிப்பு சான்றிதழ் இல்லாத சகல உரங்களையும் தரம் குறைந்த உரங்கள் எனக் கருதி 1988 இன் 68 ஆம் இலக்க உர ஒழுங்குறுத்துகை சட்டத்தின் 15,16,21 மற்றும் 22 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பது தேசிய உர செயலக அலுவலகத்தின் கீழ் மாவட்ட செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள உதவிப் பணிப்பாளர்களின் பொறுப்பாகும்.

07.5.1.3. மேலும், உதவிப் பணிப்பாளர்கள், அனுமதிப்பத்திரம் பெற்ற உர உற்பத்தித் தரப்புகளினது உரங்கள் தொகுதி உற்பத்தி செய்யப்பட்டு முடிவடைந்துள்ளது என குறித்த அந்தத் தரப்புக்கு அறிவித்ததும் தாமதியாமல் அந்த உற்பத்தியின் மாதிரிகளை, 1988 இன் 68 ஆம் இலக்க உரங்கள் ஒழுங்குறுத்துகை சட்டத்தின் 12(2) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கைத் தர நிமயங்கள் கட்டளைகள் நிறுவகத்தினால் நிர்ணயிக்கப்பட்டு, பிரகடனப்படுத்தப்பட்டுள்ள மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்படும் முறையியலை பின்பற்றி, உரிய உற்பத்தி ஸ்தலத்தில், உற்பத்தித் தரப்பினது முன்னிலையில் பெற்றுக் கொள்ள வேண்டும். அந்த மாதிரிகயை உரிய முறையில் பொறியிட்டு தேசிய உர செயலக அலுவலகத்தின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தைப் பயன்படுத்தி உரிய முறையில் உற்பத்தித் தரப்பின் / உற்பத்தித் தரப்பின் அதிகாரம் பெற்ற ஊழியரின் பெயரை தெளிவாக குறிப்பிட்டு, கையொப்பதை பெற்றுக்கொண்டு, உரிய முறையில் உதவிப் பணிப்பாளரினதும் கையொப்பமும் மற்றும் அலுவலக முத்திரையும் இடப்பட்டு தாமதியாது தேசிய உர செயலக அலுவலகத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க அல்லது நேரடியாக வந்து ஒப்படைக்க வேண்டும். அந்தந்த உரத் தொகுதிற்கு என பெற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிகளுக்கு பொறியிடப்படும் மாதிரி வீதம் குறித்த உற்பத்தித் தரப்புக்கு தேவையான சந்தர்ப்பங்களில் பரிட்சித்துப் பார்ப்பதற்கு பெற்றுக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

07.5.1.4. அத்தகைய மாதிரிகளின் பகுப்பாய்வு அறிக்கைகளை ஏழு வேலை நாட்களுக்குள் உரிய இரசாயன கூடங்களிலிருந்து பெற்றுக் கொள்வதற்கு முறையான ஒரு வேலைத் திட்டத்தை தயாரிப்பதற்கு தேசிய உர செயலக அலுவலகத்தின் பணிப்பாளர் நடவடிக்கையை எடுக்க வேண்டும். உற்பத்தித் தரப்பிடமிருந்து மாதிரிகளை பெற்றுக் கொண்டு பத்து வேலை நாட்களுக்குள் குறித்த பகுப்பாய்வு அறிக்கைகளின் பிரதிகளுடன் சேர்த்து அனுசரிப்பு சான்றிதழை, உற்பத்தித் தரப்புக்கும் மற்றும் உரியவாறு அரசாங்கத்தின் உரக் கூட்டுத் தாபனங்களுக்கும் விநியோகிக்க வேண்டும்.

07.5.1.5. அனுமதிப் பத்திரம் பெறாத உற்பத்தித் தரப்புகள் உற்பத்தி செய்யும் எந்த ஒரு உர உற்பத்தியையும் சந்தையில் விற்பனை செய்வதற்கு எந்த விதத்திலும் இடமளிக்காத வகையில் மாவட்ட உதவிப் பணிப்பாளர்கள் நடவடிக்கையை எடுக்க வேண்டும். அத்தகைய உரங்களின் விற்பனையைத் தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு குறித்த உரங்கள் ஒழுங்குறுத்துகை சட்டத்தினது ஏற்பாடுகளின் பிரகாரம் பணிப்பாளர் சான்றுபடுத்தும் பொறுப்பு, உதவிப் பணிப்பாளர்களுக்கு சாட்டப்படுகின்றது.

07.5.2. அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்கள்

07.5.2.1. அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்கள் எல்லா சந்தர்ப்பங்களிலும் உரங்களைக் கொள்வனவு செய்த பெறுகை நடைமுறையிலேயே உரங்களைக் கொள்வனவு செய்யும் போது தேசிய உர செயலக அலுவலகத்தின் அனுமதிப் பத்திரம் பெற்ற உற்பத்தித் தரப்புகளிடமிருந்து உரங்களைக் கொள்வனவு செய்ய வேண்டும். குறித்த ஒவ்வொரு உரத் தொகுதிற்கும் தேசிய உர செயலக அலுவலகத்தின் பணிப்பாளர் விநியோகித்துள்ள ஒரு அனுசரிப்பு சான்றிதழ் இருக்குமாயின் மாத்திரம், உரங்களை கமநல சேவை நிலையங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு அனுமதியை வழங்கி அதன் பிரகாரம் அந்த உரங்களை பகிர்ந்தளிக்க வேண்டும்.

07.5.2.2. அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்கள் தமது பெயரில் விற்பனை செய்யும் பொருட்டு உரங்களை / தாவரப் போஷனைப் பதார்த்தங்களைக் கொள்வனவு செய்யும் போது, உரக் கூட்டுத் தாபனங்கள், அவற்றின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள கம்பனிகளிடமிருந்து, கொள்வனவு செய்ய வேண்டும்.

07.5.2.3. அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்கள் உரங்களுக்காக மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்து, உரங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் போது மேற்குறித்த விதத்திலேயே அந்தந்த உரத் தொகுதிற்கு தேசிய உர செயலக அலுவலகத்தின் மூலம் முறையாக இரசாயனப் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதன் தர நியமம் உறுதிசெய்யப்பட்டதன் பின்னர் அனுசரிப்பு சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்ட உரத் தொகுதிற்குரிய உரங்களை மாத்திரம் பகிர்ந்தளிக்க வேண்டும்.

07.5.3. கமநல அபிவிருத்தித் திணைக்களம்

07.5.3.1. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தரத்தில் உயர்ந்த உரங்களை விவசாயிகளுக்கு விநியோகிக்க கமநல அபிவிருத்தித் திணைக்களம் கடமைப்பட்டுள்ளது.

07.5.3.2. கமநல சேவை நிலையத்திற்கு அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்களின் மூலம் அல்லது உள்நாட்டு உர உற்பத்தித் தரைப்புகளிடமிருந்து கிடைக்கும் உரங்களுக்கு உரிய நியம அனுசரிப்பு சான்றிதழ் பெறப்பட்டுள்ளது என்பதை கமநல பிராந்திய உத்தியோகத்தர்களும், உரங்கள் பகிர்ந்தளிக்கப்படும் சந்தர்ப்பத்தில் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களும் அறிந்திருக்க வேண்டும்.

07.5.3.3. ஆகையால், இறக்குமதி செய்யப்பட்ட உர உறைகளில் QR குறியீடுகள் காணப்படுகின்றனவா எனத் தேடிப்பார்த்து, அவ்வாறு குறித்த அந்தக் குறியீடுகள் இல்லாத உற்பத்திகளுக்கு தேசிய உர செயலக அலுவலகத்தின் பணிப்பாளர் விநியோகித்த அனுசரிப்பு சான்றிதழின் பிரதியை பகிர்ந்தளிக்கும் தரப்புகள் கோர வேண்டும். எனவே அதற்கு இணங்க அவ்வாறு உறுதிசெய்த உரங்களை மாத்திரம் விவசாயிகளுக்கு விநியோகிப்பது பகிர்ந்தளிக்கும் உத்தியோகத்தர்களின் பொறுப்பாகும்.

07.5.3.4. கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்களுக்கு சாட்டப்படும் சுற்றாடல்நேய உரங்களின் பாவனை பற்றிய ஒட்டுமொத்த கடமைகளும் மற்றும் பொறுப்புக்களும் பின்வருமாறு:

i. பயிர்ச் செய்கைப் போகத்தின் ஆரம்பத்தில் கமக்காரர் அமைப்புகள் கூட்டும் கூட்டங்கள் நடத்தப்பட்டு உரிய போகத்தின் பயிர்ச் செய்கை சார்ந்த செயற்பாடுகள் பற்றிய தகவல்களை சேகரித்தல்: உ+ம்: நெல் பயிரிடும் விவசாயிகளின் எண்ணிக்கை, நெல் பயிரிடப்படவுள்ள காணிகளின் ஹெக்டேயர் அளவுகள்.

ii. மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு சேகரித்த சரியான உண்மையான தகவல்களை உரிய கமநல சேவை நிலையங்களுக்கு பெற்றுக் கொடுத்தல்.

iii. தமது விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் (வி.ஆ.உ.உ.) பிரிவுக்கு உரிய சேதன உரங்களின் உற்பத்தி மற்றும் பாவிக்கும் விவசாயிகளுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்குதல் ஆகியவற்றின் நிமித்தம் தேவையான விண்ணப்பப் படிவங்களையும் மற்றும் உரிய தகவல்களையும் கமநல நிலையங்களுக்கு பெற்றுக் கொடுத்தல்.

iv. சேதன உரங்களின் வகைகளை பெற்றுத் தருகின்ற உரக் கூட்டுத் தாபனங்கள் உரங்களைப் பகிர்ந்தளிக்க முன்னர் உரிய உர வகைகளை உரிய கமநல சேவை நிலையங்களுக்கு அல்லது வி.ஆ.உ.உ. பிரிவுகளுக்கு அந்த உரக் கூட்டுத் தாபனங்களே எடுத்துச்சென்று விநியோகிக்க வேண்டும்.

- அவ்வாறு, கமநல சேவை நிலையங்களுக்கு எடுத்துவரப்படுகின்ற உரங்களை விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் தமது வி.ஆ.உ.ப. பிரிவுகளுக்குரிய கமக்காரர் அமைப்புகளின் ஊடாக விவசாயிகளுக்கு பகிர்ந்தளித்தல்.

- வி.ஆ.உ.பி. பிரிவுகளுக்கு எடுத்து வந்த உரங்களை உரிய பிரிவுக்கு பொறுப்புடைய விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் பொறுப்பேற்ற பின்னர் மேற்குறித்த விதத்தில் அந்த உரங்களை விவசாயிகளுக்கு பகிர்ந்தளித்தல்.

v. உரங்களை பகிர்ந்தளிப்பது தொடர்பான ஆவணங்களையும் மற்றும் தரவு அறிக்கைகளையும் பேணி அத்தகைய தகவல்களை உரிய கமநல சேவை நிலையங்களுக்கு சமர்ப்பித்தல்.

07.5.4. விவசாயத் திணைக்களம்

07.5.4.1. சகல உள்நாட்டு உற்பத்தித் தரப்புகளினதும் உரங்களையும் மற்றும் இறக்குமதி செய்யப்படுகின்ற உரங்களையும் பத்தலகொட, பரந்தன் மற்றும் போம்புவெல ஆகிய ஆய்வுகூடங்களில் கள ரீதியான பரிசோதனைகளுக்கு அனுப்பி அந்த உரங்களின் பயனும் மற்றும் வினைத்திறனும் தொடர்பான சிபாரிசுகளை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

07.5.4.2. விவசாயத் திணைக்களத்தின் விவசாய ஆலோசகர்களுக்கு சுற்றாடல்நேய உரங்களின் பாவனை தொடர்பாக சாட்டப்படும் கடமைகளும் பொறுப்புக்களும் பின்வருமாறு:

- விவசாயத் தொழில் நுட்பத்தை பகிர்ந்தளித்து, மனித வள முகாமைத்துவம் மற்றும் பல பிரிவுகள் என்பவற்றுடன் ஒருங்கிணைந்து தனது அதிகார பிரதேசத்தில் விவசாயத் தொழில் நுட்பத்தை விவசாயிகளுக்கும், தொழில்முயற்சியாளர்களுக்கும், ஏனைய தரப்புகளுக்கும் பெற்றுக் கொடுப்பது முக்கியமானதாகும்.

i. விவசாய பணிப்பாளர் நாயகத்தினால் 2022 ஆம் ஆண்டிற்கு தயாரித்து முன்வைக்கப்பட்டுள்ள வழிகாட்டல்கள் பற்றி விவசாயிகளுக்கு விழிப்பூட்டுதல், பயிற்சி அளித்தல் மற்றும் அது பற்றி விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களுக்கும் மற்றும் ஏனைய தரப்புகளுக்கும் விழிப்பூட்டுதல்.

ii. பசுமை விவசாயத்திற்கு கள ரீதியான முன்மாதிரி, கள தினங்களை நடத்துதல்.

iii. பயிர்ச் செய்கைப் போகத்தில் ஏற்படும் பிரச்சினைகள் பற்றி மாகாண விவசாய / மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர்களுக்கு அறியப்படுத்தி மேலும் நடவடிக்கைகளை எடுக்க தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ளல்.

iv. விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் / மாகாண விவசாயப் பணிப்பாளர்களினால் / பிரதி விவசாயப் பணிப்பாளர்களினால் பசுமை விவசாயம் சம்பந்தமாக காலத்திற்கேற்றவாறு பெற்றுக் கொடுக்கப்படும் தகவல்களை கள ரீதியில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து, விவசாயிகளை ஈடுபடுத்துதல்.

07.5.5. சுற்றாடல்நேய உர மாவட்ட செயல் குழு

07.5.5.1. சுற்றாடல்நேய உரங்களை நெற் பயிருக்கு பெற்றுக் கொடுக்கும் போது அந்தந்த மாவட்டத்திற்கு தேவையான சுற்றாடல்நேய உரங்களின் அளவுகளை முடியுமான வரையில் அந்த மாவட்டத்தினுள் பெற்றுக் கொள்வதற்கும், அந்தந்த மாவட்டத்தின் உர உற்பத்திகளின் தர நியமங்களை மேலும் மேம்படுத்துவதற்கும், உரிய கால நேரத்திற்கு பெற்றுக் கொடுக்கும் இலக்கை அடைவதற்கும் உரிய கால நேரத்திற்கு உரங்களை விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கும் உரிய விடயத்திற்கு பொறுப்புடைய உத்தியோகத்தர் குழு கண்காணிப்பதற்கும் மற்றும் பின்னூட்டல் செய்வதற்கும், உர உற்பத்திக் குழுவாக ஒன்றுசேர்த்து மாவட்டத்தின் உர தேவையை பூர்த்தி செய்வதற்கு ஒரு வேலைத் திட்டத்தை தயாரிப்பதற்கும், படிப்படியாக சேதன உரங்களை சான்றுபடுத்திக் கொள்ளும் வகையில் சான்றுபடுத்தல் சேவை நிலையத்திற்கு உர உற்பத்தித் தரப்புகளை குறிப்பீடுசெய்யும் நோக்கில் இந்தக் குழு தாபிக்கப்படும்.

07.5.5.2. இந்த மாவட்டக் குழு மாவட்ட செயலாளரின்/ அரசாங்க அதிபரின் பங்குபற்றலில், மாவட்ட விவசாயப் பணிப்பாளர்கள், பிரதி / உதவி கமநல ஆணையாளர்கள், பிராந்திய மாகாண விவசாயப் பணிப்பாளர்கள், மாவட்ட உதவிப் பணிப்பாளர்கள் - தேசிய உர செயலக அலுவலகத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள், பசுமை விவசாய செயற்பாட்டு நிலையத்தின் உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கியிருக்கும்.

மாகாணங்களுக்கு இடையில் இந்தக் குழுவில் மாகாணங்களுக்கு இடையிலான பிரதி விவசாயப் பணிப்பாளர்களும், மகாவலி வலயங்களின் முகாமையாளர்களும் உள்ளடங்குவார்கள்.

**07.5.5.3.** மாவட்டக் குழுவின் பொறுப்புப் பணிகள்

07.5.5.3.1. மாவட்டத்திற்கு என பெயர் குறித்த/தேர்ந்தெடுத்த முக்கியமான உர விநியோகத் தரப்புகளுடன் சிறு மற்றும் நடுத்தரளவான ஏனைய கொம்போஸ்ட்டு/திரவ உர உற்பத்தித் தரப்புகளை இணைத்து சிறு மற்றும் நடுத்தரளவான உர உற்பத்தித் தரப்புகளை பிரதான விநியோகத் தரப்புகளுடன் இணைக்க நடவடிக்கை எடுத்தல்.

07.5.5.3.2. உயிரியல் உரங்களின் தரத்தை மேம்படுத்தும் முகமாக விவசாய நிபுணர்கள் அடங்கிய ஒரு தொழில் நுட்பக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவை இணைத்துக் கொண்டு உள்நாட்டு உயிரியல் உரங்களின் தரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல். ஏனைய திண்ம மற்றும் திரவ உரங்களின் தர நியமத்தை விவசாயத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களை இணைத்துக் கொண்டு மேம்படுத்துதல்.

07.5.5.3.3. கொம்போஸ்ட்டு உரங்களை / திண்ம உரங்களை களஞ்சியப்படுத்தும் முகமாக கமநல சேவை நிலையங்களில் இடவசதிகள் போதியளவில் கிடைக்கக் கூடியதாகவில்லை. ஆகையால் பிரதான விநியோகத் தரப்புகளின் கொம்போஸ்ட்டு உரங்களை/ திண்ம உரங்களை களஞ்சியப்படுத்துவற்கு அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்களின் களஞ்சியசாலைகளையும் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய களஞ்சியசாலைகளையும் தயார்படுத்தி வைத்தல்.

07.5.5.3.4. விவசாயிகளுக்கு உரிய கால நேரத்தில் தமது விவசாய நிலங்களுக்கு உரங்களை விநியோகிக்கும் போது, எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகளில் பிரச்சினைகள் எழுகினற நேரங்களில், இலங்கை இராணுவத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள பசுமை செயற்பாட்டு நிலையத்துடன் (தொ.பே. 0112820629) தொடர்புகொண்டு அத்தகைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கான ஒரு பொறிமுறையைத் தயாரித்தல்.

07.5.5.3.5. சிறு மற்றும் நடுத்தரளவான உர உற்பத்தித் தரப்புகளுக்கு தேவையான நிதி வசதிகள், இயந்திர உபகரணங்கள் முதலிய வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்கு அந்தத் தரப்புகளின் தேவைகளை கண்டறிந்து தேவையான பிரிவுகளுக்கு குறிப்பீடு செய்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

07.5.5.3.6. சிபாரிசு செய்யப்படும் உரங்களை உரிய விதத்தில் பாவிப்பது பற்றி விவசாயிகளுக்கு அறியப் படுத்த, உர விநியோகத் தரப்புகளையும் விவசாயத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களையும், கமநல சேவை நிலையங்களின் உத்தியோகத்தர்களையும் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

07.5.5.3.7. மாவட்டத்திலுள்ள சேதன உர உற்பத்தித் தரப்புகளுக்கு SLS சான்றிதழையும், GMP சான்றிதழையும் (Good Manufacturing Practices) பெற்றுக் கொடுப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல்.

07.5.5.3.8. இது தவிர, சுற்றாடல்நேய உர உற்பத்தி சான்றிதழை பெற்றிருக்கின்ற ஒரு நிறுவனத்தின் மூலம் சான்றுபடுத்தலின் நிமித்தம் குறிப்பீடு செய்து, அந்த சேதன உரங்களை பாவித்து பயிரிடப்படும் துறைகளை இனங்கண்டு, அந்த விவசாயிகளை குழுக்களாக ஒழுங்கமைத்து அந்த விவசாயிகளின் உற்பத்திகளை சேதன சான்றுபடுத்தல் செயல்முறை வரை கொண்டுசெல்ல ஏற்றுமதி அபிவிருத்தி சபையுடனும் மற்றும் இலங்கை சான்றுபடுத்தும் சபையுடனும் இணைந்து செயல்படும் முகமாக கவனத்தை செலுத்தி அந்த உற்பத்திகளை வெளிநாட்டு சந்தைகள் வரை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

07.5.5.3.9. இயற்கைப் பயிர்ச் செய்கை முறையில் களைத் தாவரங்களுக்கு களைநாசினிகளை இடுவதற்கான சாத்தியம் இல்லாததால் இடப்படும் உரங்களை களைத் தாவரங்கள் உருஞ்சியெடுப்பதும் மற்றும் அதனை கிருமிநாசினிகளுக்காக ஒரு காவியாக பாவிப்பதும் பிரதான தடைகளாக இருக்கின்றன.

ஆகையால், தாவர நடுகைக்கன்றுகளை நடுவது ஒரு அத்தியாவசிய அங்கமாக விளங்குகின்றது. அதனை வினைத்திறனாகவும் பயனுள்ளதாகவும் மேற்கொள்ளும் பொருட்டு சிறியளவான வயல் காணிகளுக்கு பரசூட்டுத் தட்டுக்களையும் மற்றும் பெரியளவான வயல் காணிகளுக்கு தாவர நடுகைக்கன்றுகளை நடும் இயந்திரங்களையும் அறிமுகப்படுத்துவது அத்தியாவசியமாகும். இதன் நிமித்தம் பொருத்தமானவாறு ஏற்பாடுகளை முன்மொழிவதற்கும் இந்தக் குழு கவனத்திற் கொள்ள வேண்டும். ஆகையால், அதற்கான பிரேரணைத் திட்டங்களை அந்தந்த மாவட்டத்தின் மூலம் இந்த அமைச்சுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும் என இந்தக் குழு எதிர்பார்க்கப்படுகின்றது.

07.5.5.3.10. அதே போல் மண்ணில் காணப்படுகின்ற காபன் பதார்த்தங்களின் அளவுகளையும் பொசுபரஸின் அளவுகளையும், சேதன உரங்களை பாவித்து நெல்லைப் பயிரிடுகின்ற போது மிகவும் கவனமாக பரிசீலித்துப்பார்க்க வேண்டும். ஆகையால், விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து நெல் வயல் தொகுதி மட்டத்தில் மண் வளத்தை பரிசோதிப்பதற்கு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்தல், பெறுபேறுகளை வெளியிடுதல், அதன் பிரகாரம் உரங்களை பாவிப்பது பற்றிய அறிவுரைகளை விவசாயிகளுக்கு வழங்குதல் ஆகியவற்றின் நிமித்தம் ஒரு வேலைத் திட்டத்தைத் தயாரித்தல்.

07.5.5.3.11. முன்னேற்ற மீளாய்வும் பின்னூட்டும் செயற்பாடுகளும்

சிறுபோகத்தின் நிமித்தம் மாவட்டத்திற்கு தேவையான உர வகைகளும் மற்றும் அளவுகளும் போதுமானதாகவுள்ளனவா என தேடிப்பார்த்து அத்தகைய தேவைப்பாடுகளை உர விநியோகத் தரப்புகளின் மூலமாக பூர்த்தி செய்து கொள்வதற்கும் மற்றும் பகிர்ந்தளிக்கும் செயற்பாடுகள் உரிய முறையில் நிகழ்கின்றனவா என தினமும் தேடிப்பார்த்து குறைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கும், தீர்க்க முடியாத பிரச்சினைகளை கமத்தொழில் இராஜாங்க அமைச்சுக்கு குறிப்பீடு செய்தவற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அமைச்சினால் உரிய பிரிவுகளுடன் ஒருங்கிணைந்து பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

07.6. மேற்குறித்த சகல நிபந்தனைகளையும், கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றும் போது இந்த வழிகாட்டல் ஆவணத்தின் 1.6 ஆம் பந்தியிற்கு அதிகளவான கவனத்தை செலுத்தி செயல்படுவது இதனுடன் தொடர்புடைய சகல தரப்புகளினதும் பொறுப்பாகும்.

## 08. உரங்கள் பகிர்ந்தளிக்கப்படும் வலயங்கள்

08.1. அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்கள், அரசாங்கத்தின் மூலம் இறக்குமதி செய்யப்பட்டுள்ள சேதன உர சான்றிதழைப் பெற்றுள்ள உர வகைகள், அளவுகள் மற்றும் உள்நாட்டு உர உற்பத்திகளின் கொள்வனவு முதலிய விடய அம்சங்களை கருத்திற் கொண்டு அந்தந்த கமநல சேவை அதிகார பிரதேசங்களுக்கு உரங்களைப் பகிர்ந்தளிக்கும் பொறுப்பை தனித்தனியாக இனங்கண்டு கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கு அறியப்படுத்த வேண்டும். அதன்படி கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் உரங்களைக் கொள்வனவு செய்வதற்கான கொள்வனவுக் கட்டளையை விடுக்குமாறு கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

## 09. உரக் களஞ்சியசாலைகளும் மற்றும் களஞ்சியசாலைகளைப் பதிவு செய்தலும்

09.1. வணிகளவில் உரங்களை களஞ்சியப்படுத்தும் நிலையங்களை தேசிய உர செயலக அலுவலகத்தில் பதிவு செய்து கொள்வது ஒரு சட்டமுறையான தேவைப்பாடாகும்.

09.2. ஆகையால், நிவாரண அடிப்படையிலான உரங்கள் பகிர்ந்தளிப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் சம்பந்தப் படும் அனைத்து நிறுவனங்களும், தற்பொழுது தேசிய உர செயலக அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளாத உரக் களஞ்சியசாலைகளை கீழே காணப்படுகின்ற விபரங்களை தேசிய உர செயலக அலுவலகத்திற்கு சமர்ப்பித்து பதிவு செய்து கொள்ள வேண்டும்.

09.2.1. நிறுவனத்தின் பெயர்

09.2.2. களஞ்சியசாலையின் பெயரும் அமைந்துள்ள இடமும்

09.2.3. களஞ்சியசாலையின் கொள்ளளவு (மெ.டொ.)

09.2.4. அருகிலுள்ள நகரம் மற்றும் அந்த நகரத்திலிருந்து களஞ்சியசாலைக்கு பிரவேசிக்கக் கூடிய வீதிகள் பற்றிய விபரங்கள்

## 10. அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்களின் பிராந்திய உரக் களஞ்சியசாலைகளுக்கு உரங்களை விநியோகித்தல்

10.1. உரங்களை ஏற்றிச்செல்லும் நிமித்தம் பதிவு செய்துள்ள போக்குவரத்துத் தரப்புகளின் மூலமாக மாத்திரம் அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்கள் உரங்களை ஏற்றிச்செல்ல வேண்டும்.

10.2. ஒரு தடவைக்கு ஏற்றிச்செல்லப்படும் உர அளவுகளின் பெறுமானத்தைக் கருத்திற் கொண்டு அதன் பாதுகாப்புக் கருதி உரிய முறையில் ஒரு உறுதிப்பாடு உரங்களை ஏற்றிச்செல்லும் நிமித்தம் பதிவு செய்த போக்குவரத்துத் தரப்புகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படுவதற்கு அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்கள் ஒரு வேலைத் திட்டத்தை செயற்படுத்த வேண்டும்.

10.3. இந்த உரங்களை ஏற்றிச்செல்லும் சந்தர்ப்பங்களில் உரிய அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்கள் விநியோகிக்கும் 'போக்குவரத்து பின்னூட்டல் குறிப்பு அட்டை' கட்டாயமும் அத்தியாவசியமுமாகும்.

10.4. உரங்களை ஏற்றிச்சென்று பகிர்ந்தளிக்கும் பொருட்டு வருகின்ற லொறிகளுக்கு தாமதம் ஏற்படாத வகையில் உரங்களை ஏற்றுவதற்கு, அவை வருகை தருகின்ற ஒழுங்குமுறையை அடிப்படையாகக் கொண்டு முழுமையான உடன்பாட்டுடன் கூடிய ஒரு வேலைத் திட்டத்தை பின்பற்ற வேண்டும்.

10.5. உரங்கள் பகிர்ந்தளிக்கும் செயற்பாட்டை வினைத்திறனாக மேற்கொள்ளும் பொருட்டு உரங்களை ஏற்றிச்செல்கின்ற தரப்புகளின் சேவைகளை முறையாகவும் மற்றும் தாமதமின்றியும் பெற்றுக் கொள்வதற்கான ஒரு வேலைத் திட்டத்தை செயற்படுத்த வேண்டும். அந்த வேலைத் திட்டத்தை உரிய முறையில் கண்காணிக்கவும் வேண்டும். பயிர்ச் செய்கைப் போகத்தில் ஒரே தடவையில் கோரப்படுகின்ற உரங்களின் தேவைகளுக்கும், கள ரீதியில் பதிவாகும் அவசரநிலைமைகளுக்கும் முகம்கொடுக்கும் பொருட்டு பொதுவான ஒரு போக்குவரத்து வேலைத் திட்டத்திற்கு மேலதிகமாக ஒரு போக்குவரத்து வசதியை பேணிச்செல்வதற்கான ஒரு வேலைத் திட்டத்தையும் செயற்படுத்த வேண்டும்.

10.6. உரங்களைப் பகிர்ந்தளிக்கும் செயற்பாட்டை வினைத்திறனாக முன்னெடுப்பதற்கு அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்கள் மாவட்டத்திற்கான ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களை இணைத்து அந்த உத்தியோகத்தர்களின் பெயரகள், அலுவலக முகவரிகள் மற்றும் அவர்களுடன் இலகுவாக தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கங்கள் முதலிய விபரங்களை உரிய தரப்புகளுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும்.

10.7. அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்கள் ஒவ்வொரு கேள்வி மனுவின் கீழும் பெற்றுக் கொள்ளுகின்ற உரங்கள் எந்த கமநல சேவை நிலையத்திற்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றன என்பதை கண்டறியக் கூடிய வகையில் பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும். பெற்றுக் கொள்ளப்பட்ட உரங்களின் நிமித்தம் நிவாரண நிதிக்கு விண்ணப்பிக்கும் போது இந்த விபரங்களை எழுத்தில் உறுதிப்படுத்த வேண்டும்.

## 11. அரசாங்க உரக் கம்பனிகளின் பிராந்திய களஞ்சியசாலைகளிலிருந்து நிவாரண உரங்களை விநியோகித்தல்

11.1. அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்கள் நிவாரண அடிப்படையில் உரங்களை விநியோகிக்க வேண்டியது ஒவ்வொரு மாவட்டத்திலும் தனது நிறுவனத்திற்கு இணைக்கப்பட்டுள்ள வலய கமநல சேவை நிலையங்களுக்கு மாத்திரமாகும். அது பற்றிய உடன்பாட்டின் அடிப்படையில் தயாரித்த களஞ்சியசாலைப் பட்டியலை கமநல அபிவிருத்தித் திணைக்களம் அமைச்சுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

11.2. ஒவ்வொரு கமநல சேவை நிலையத்திற்கும் விநியோகிக்க வேண்டிய உரங்களின் அளவுகளை கணக்கிட்டு தனது நிறுவனத்தின் கீழ் காணப்படுகின்ற களஞ்சியசாலைகளில் களஞ்சியப்படுத்த உரக் கூட்டுத் தாபனங்கள் நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

11.3. ஒவ்வொரு கமநல சேவை நிலையத்திற்கும் என இனங்காணப்பட்டுள்ள உரங்கள் பகிர்ந்தளிப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையான உரங்களை அடிப்படையாகக் கொண்டு உரங்களை விநியோகிக்க வேண்டும். எதிர்வருகின்ற பயிர்ச் செய்கைப் போகத்தில் நிவாரண அடிப்படையில் உரங்களைப் பகிர்ந்தளிக்கும் போது கமநல சேவை அலோசனைக் குழுவின் மூலம் அந்த பயிர்ச் செய்கைப் போகத்தில் தேவையான முதலாவது உரங்கள் விநியோகிக்கப்படுவதற்கு முன்னர்,

11.3.1. கடந்த பயிர்ச் செய்கைப் போகத்தில் அல்லது அதற்கு முன்னைய பயிர்ச் செய்கைப் போகங்களில் அந்த நிறுவனத்திடம் எஞ்சியுள்ள சுற்றாடல்நேய உரங்களின் இருப்புக்கள் பற்றிய எழுத்திலான ஒரு அறிக்கை, பின்னர் செய்யப்படுகின்ற திருத்தங்கள் இன்றி பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும். அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படும் நிறுவனத்தினால் அதில் அடங்கியுள்ள விபரங்களின் செவ்வைத் தன்மை உரிய மாவட்டத்தில் தேசிய உர செயலக அலுவலகத்தினால் இணைக்கப்பட்டுள்ள உதவிப் பணிப்பாளரினால் அல்லது தேசிய உர செயலக அலுவலகத்தின் அந்த உதவிப் பணிப்பாளர் ஒருவர் இணைக்கப்படாத மாவட்டங்களில் மாவட்ட உரங்கள் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரினால் (மாவட்ட செயலாளர்) பெயர் குறிக்கப்படும் ஒரு உத்தியோகத்தரினால் தனது கையொப்பத்தை இட்டு உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். தாமதமின்றி உடனடியாக விவசாயிகளுக்கு உரங்களை விநியோகிக்கக்கூடிய வகையில் நேர காலத்தோடு உரிய ஆவணங்களை தயாரித்துக் கொள்ளும் பொறுப்பு விவசாயிகளுக்கு உரங்களை விநியோகிக்கும் நிறுவனங்களுக்குரியதாகும்.

11.3.2. எழுத்திலான அந்த அறிக்கையை, கேட்டுக் கொள்ளப்படும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் சமர்ப்பிக்க அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்களின் உரங்களை விநியோகித்த உத்தியோகத்தர்கள் உரியவாறு பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும்.

11.3.3. எதிர்வரும் பயிர்ச் செய்கைப் போகத்திற்கு விநியோகிக்க வேண்டியது உரங்கள் பகிர்ந்தளிப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலக்குகள், மேற்குறித்தவாறு கடந்த பயிர்ச் செய்கைப் போகங்களில் எஞ்சியுள்ள உரங்களின் அளவுகள் கழிக்கப்பட்டு உரங்களின் தேவை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என உறுதிசெய்யப்பட்டதன் பின்னர் மாத்திரமேயாகும்.

11.3.4. அவ்வாறு உரங்கள் விநியோகிக்கப்படுகின்ற போது இந்த சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியில் அடங்கியுள்ள விடயங்களை மீறக் கூடாது.

11.4. அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்களின் பிரதான அல்லது பிராந்திய உரக் களஞ்சியசாலைகளில் இருந்து கமநல சேவை ஆலோசனைக் குழுக்களுக்கு உரங்கள் விநியோகிக்கப்படுகின்ற போது, அந்த உரங்கள் விநியோகிக்கப்படும் பற்றுச்சீட்டு அட்டையில் உரங்களைப் பெற்றுக் கொள்ளும் நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் என்பன தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். அந்தப் பற்றுச்சீட்டு உரக் களஞ்சியசாலைகளிலிருந்து கமநல சேவை நிலையங்களுக்கு நிவாரண அடிப்படையிலான உரங்களை ஏற்றிச்செல்வதற்கான அல்லது களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான ஒரு அனுமதிப் பத்திரமாக கருதப்படுதல் வேண்டும். அத்தகைய ஒரு பற்றுச்சீட்டு அட்டை இன்றி உரங்களை ஏற்றிச் செல்வது அல்லது உரங்களை உடமையில் வைத்திருப்பது மோசடியான ஒரு செயலாகக் கருதி நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

11.5. உரங்களைப் பெற்று பகிர்ந்தளிக்கும் செயற்பாட்டை வினைத்திறனாக மேற்கொள்ளும் பொருட்டு பிராந்திய முகாமையாளர்களின் கண்காணிப்பின் கீழ் அலுவலக நேரங்களுக்கு மேலதிக உரக் களஞ்சியசாலைகளை திறந்து வைப்பதற்கான ஒரு வேலைத் திட்டத்தை செயற்படுத்த வேண்டும்.

**12. நிவாரண வரையறயைகளை விஞ்சி உரங்களை விற்பனை செய்தல், பணத்தை சேகரித்தல் மற்றும் அறிக்கைகளை பேணுதல் மற்றும் விநியோகத் தரப்புகளுக்கு கொடுப்பனவுகளை செலுத்துதல்.**

12.1. கமநல சேவை நிலையங்களினால் உரங்களின் தேவைகள் இனங்கண்டு கொள்ளப்படும் போது ஒவ்வொரு விவசாயிக்கும் நெல் நிவாரணத்தின் கீழ் உரங்கள் விநியோகிக்கப்படும் 02 ஹெக்டேயர் என்ற அளவுகள் மற்றும் விவசாயிகளிடமுள்ள மேலதிக ஹெக்டேயர் அளவுகள் பற்றிய தரவுகள் அடங்கலாக தேவையான மொத்த உரங்கள் தொடர்பான விபரங்கள் இரண்டு (02) உரக் கூட்டுத் தாபனங்களுக்கும், அமைச்சுக்கும் ஒரு பிரதியுடன் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அந்தத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இரண்டு (02) உரக் கூட்டுத் தாபனங்களும் உரங்கள் பகிர்ந்தளிப்புத் திட்டத்தை தயாரித்து கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கும், ஒரு பிரதியுடன் அமைச்சுக்கும் சமர்ப்பிக்க வேண்டும்.

12.2. நிவாரண வரையறைகளை விஞ்சி விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்ற நெற் பயிருக்கான உரங்களுக்கு விவசாயிகளிடமிருந்து ஒரு விலை அறவிடப்படுதல் வேண்டும். அறவிடப்படும் அந்த விலையை அமைச்சு நிர்ணயிக்கும். அரசாங்கத்தின் உரக் கூட்டுத் தாபனங்களின் கீழ் காணப்படும் வலயத்திற்குரிய களஞ்சியசாலைகளிலிருந்து மாத்திரம் உரங்களை விநியோகித்தல் வேண்டும். விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளரின் சிபாரிசுகளின் பேரில் கமநல அபிவிருத்தி பிராந்திய அபிவிருத்தி உத்தியோகத்தர் அனுமதித்த நெற் பயிருக்கான உரங்களின் அளவுகளை மாத்திரம் விநியோகிக்க வேண்டும். இந்த சிபாரிசையும் அனுமதியையும் வழங்க அட்டவணை 12 ஐ பயன்படுத்த வேண்டும். இதில் தரவுகளை சேகரிக்கும் போது பெற்றுக் கொள்ளப்படும் அந்த விவசாயிக்கு பெற்றுக் கொடுக்க வேண்டிய மொத்த ஹெக்டேயர் அளவுகளை விஞ்சாத வகையில் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளரும், கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தரும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

12.3. நிவாரண வரையறைகளை விஞ்சி உரக் களஞ்சியசாலைகளிலிருந்து விநியோகிக்கப்படுகின்ற உரங்களின் அளவுகளுக்கான ஒரு விநியோகக் கட்டளையையும் (Issue Order) மற்றும் அறவிடப்பட்ட பணத்திற்கான ஒரு பற்றுச்சீட்டையும் (பொது 172) விவசாயிக்கு வழங்க வேண்டும். விநியோகக் கட்டளையின் ஒரு பிரதியை உரிய கமநல சேவை நிலையத்திற்கும் மற்றும் அமைச்சின் கணக்குப் பிரிவுக்கும் அனுப்பி வைக்க வேண்டும்.

12.4. அறவிடப்படும் பணத்தை கம்பனியின் உத்தியோகபூர்வ கணக்குக்கு வரவுவைத்தல் வேண்டும். ஒவ்வொரு மாதத்தினதும் 01 முதல் 31 ஆம் திகதி வரை அறவிடப்பட்டுள்ள மொத்தப் பணத்திற்கு சமனான ஒரு காசோலையை அடுத்த மாதம் 10 ஆம் திகதிற்கு முன்னர் கமத்தொழில் இராஜாங்க அமைச்சின் பெயருக்கு 60 நாட்களுக்கு என குறுக்குக்கோடிட்டு அமைச்சின் கணக்குப் பிரிவுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

12.5. அவ்வாறு அனுப்பி வைக்கப்படுகின்ற காசோலையுடன் அந்தப் பணத் தொகைக்குரிய ஒவ்வொரு தினத்திலும் விநியோகிக்கப்பட்ட உரங்களின் அளவுகள், விநியோகக் கட்டளையின் இலக்கம், நெல் விவசாயினது பெயர், பற்றுச்சீட்டு இலக்கம், கிடைத்த பணம் மற்றும் கமநல சேவை நிலையத்தின் பெயர் என்பன அடங்கிய ஒரு பட்டியலை இணைத்து அனுப்பி வைக்க வேண்டும். பற்றுச்சீட்டை விநியோகிக்கும் பொருட்டு தொடர் இலக்க ஒழுங்கில் அச்சீட்டு பற்றுச்சீட்டுப் புத்தகங்களைப் பாவிக்க வேண்டும்.

12.6. விநியோகத் தரப்புகளுக்கு கொடுப்பனவுகளை செலுத்துகின்ற போது கீழ்காணும் அவணங்களை பரிசீலித்துப்பார்த்து கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டும்.

i. அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்களுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள செல்லுபடியாகும் ஒப்பந்த ஆவணம்

ii. பொருட்களைக் கொள்வனவு செய்யும் கொள்வனவுக் கட்டளைக்குரிய (PO) விநியோகத் தரப்பின் பிரதி

iii. கொள்வனவுக் கட்டளைக்குரிய விநியோகத் தரப்பு கம்பனிக்கு விநியோகித்த உரங்கள் விற்பனை செலவுப்பட்டியல் (Invoice)

iv. அந்த விற்பனை செலவுப்பட்டியல் (Invoice) உரிய கமநல சேவை நிலையத்தின் மூலம் உரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டமையை உறுதிப்படுத்தி விநியோகிக்கப்பட்ட பொருட்கள் பொறுப்பேற்கும் பத்திரத்தின் அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்களுக்குரிய பிரதிகள் மற்றும் விநியோகத் தரப்புக்கு உரிய மூலப்பிரதிகள்

v. தேசிய உர செயலக அலுவலகத்தின் மூலம் விநியோகிக்கப்பட்ட உரத் தொகுதிற்குரிய தர நியமம் அனுசரிக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தி விநியோகிக்கப்பட்டுள்ள சான்றிதழ்

**13. நிவாரண உரங்களைப் பகிர்ந்தளிக்கின்ற போது உள்நாட்டு உர உற்பத்தித் தரப்புகளின் கடமைகளும் மற்றும் பொறுப்புக்களும்**

13.1. உள்நாட்டு உர உற்பத்தித் தரப்புகள் உரங்களை, குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்கும் மற்றும் தர நியமங்களுக்கும் ஏற்ப கொள்வனவுத் தரப்பாகிய அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும்.

13.2. அவ்வாறிருப்பினும், உற்பத்தித் தரப்பு முன்மொழிந்துள்ளவாறு, விவசாயிகளின் வயல் காணிகளுக்கு ஏற்ப உரங்களைப் பகிர்ந்தளிக்கும் பொறுப்பை உற்பத்தித் தரப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும். அதே போல், பயிரிடப்படுகின்ற காலப் பகுதியினுள் விவசாயிகளுக்கு உரிய அறிவுரைகளை வழங்கும் பொறுப்பையும் உற்பத்தித் தரப்புகள் / பகிர்ந்தளிக்கும் தரப்புகள் ஏற்றுக் கொள்ள வேண்டும். மேலே கூறப்பட்டுள்ள உர உற்பத்திகளின் தர நியமங்கள் சம்பந்தமாக எழுகின்ற எந்த ஒரு பிரச்சினைக்கும் தேசிய உர செயலக அலுவலகம் பொறுப்புக்கூறாது. ஒரு உற்பத்தியினுள் அடங்கியிருக்க வேண்டிய தரம் குறைவான அல்லது கலவை உர அளவுகள் தொடர்பாக, உரிய சட்டத்தின் கீழ் காணப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

13.3. கொள்வனவுக் கட்டளையில் அவ்வப்பொழுது குறிப்பிடப்படும் நியதிகள் மற்றும் நிபந்தனைகள், தரம் தொடர்பான நெறிமுறைகள், பொருட்களை ஒப்படைக்கும் அட்டவணைகள் என்பவற்றை முற்றிலும் அனுசரித்து உர உற்பத்தித் தரப்புகள் உரங்களை விநியோகிக்க வேண்டும்.

13.4. கொள்வனவுக் கட்டளையை உற்பத்தித் தரப்புக்கு விநியோகித்த நாளிலிருந்து 20 நாட்களுக்குள் உற்பத்தித் தரப்பு குறித்த உரங்களை விநியோகிக்க வேண்டும். பொருட்கள் ஒப்படைப்பதற்கான அட்டவணையின் (அட்டவணை 13) பிரகாரம், கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தரினது ஒருங்கிணைப்பில் விவசாயிகளின் உரிய மத்திய நிலையங்களுக்கு உர உற்பத்தித் தரப்பு அந்த உர உற்பத்திகளை பகிர்ந்தளிக்க நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

13.4.1. கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினது சிபாரிசின் போ◌ில் www.aginfo.agrimin.gov.lk என்ற இணையத்தளத்தில் பிரசுரித்துள்ள உரங்கள் பகிர்ந்தளிப்பு திட்டத்திற்கு இணங்க, தேசிய உர செயலக அலுவலகத்தின் பணிப்பாளர் அந்தக் கொள்வனவுக் கட்டளைக்குரிய உரத் தொகுதியின் அனுசரிப்புத் தன்மை உறுதிப்படுத்திய பின்னர் கமநல அபிவிருத்தி உதவி/பிரதி ஆணையாளருக்கு/கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தருக்கு உரங்களை விநியோகிக்க வேண்டும். கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தரினதும் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளரினதும் ஒருங்கிணைப்பில் விவசாயிகளுக்குரிய உரங்களை நேரடியாகப் பகிர்ந்தளிக்க வேண்டும்.

13.5. உரப் பொதியில் ஏதாவது பழுதடைந்திருந்தால் அந்த உற்பத்தியை நிராகரிக்க வேண்டும்.

13.6. சோதனையிடுதலும் மற்றும் பரிசீலித்தலும்

13.6.1. ஒவ்வொரு உரத் தொகுதிற்கும் தேசிய உர செயலக அலுவலகம் அதிகாரம் அளித்த உத்தியோகத்தர் ஒருவர் மேற்கொள்ளும் தர மற்றும் தகுதி பரிசீலனை ஒன்றுக்காக சமர்ப்பிப்பதற்கும் மற்றும் அந்தத் தொகுதியின் உரங்களை அரசாங்க இரசாயன ஆய்வு கூடம் ஒன்றினுள் பரிசீலனைக்கு உட்படுத்தி உறுதிசெய்து கொள்வதற்கும் என தேசிய உர செயலக அலவலகத்தின் பணிப்பாளர் ஒரு வேலைத் திட்டத்தை செயற்படுத்த வேண்டும். அந்தப் பரிசீலனைக்கு செலவாகும் செலவுகளை உர உற்பத்தித் தரப்பு பொறுப்பேற்க வேண்டும்.

13.7. உற்பத்தித் தரப்பு விவசாயப் பணிப்பாளர் நாயகம் விதித்துள்ளவாறு கள ரீதியான பரிசேதனைகளை மேற்கொள்வதற்கு தேவையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

13.8. சகல உற்பத்தித் தரப்புகளும் தமது உர உற்பத்தித் தொகுதிகளுக்கு இடையில் தேசிய உர செயலக அலுவலகம் மேலெந்த வாரியாக தேர்ந்தெடுக்கும் உரத் தொகுதியின் ஒரு உர மாதிரியை இலங்கை சான்றுபடுத்தும் சபை சிபாரிசு செய்த சேதன உரத்திற்கான அந்தந்தத் தகவுதிறன்களின் நிமித்தம் சான்றுபடுத்தப்பட்டுள்ள ISO 17025 தர சான்றிதழ் பெற்ற ஒரு இரசாயனப் பகுப்பாய்வு கூடத்திலிருந்து பகுப்பாய்வை செய்து கொள்வதற்கு செலவாகும் செலவுகளை பொறுப்பேற்க வேண்டும்.

13.9. ஏதாவது ஒரு உர மாதிரி / ஒரு உர உற்பத்தி தேசிய உர செயலக அலுவலகத்தின் தகவுதிறன்களை அனுசரிக்காத பட்சத்தில் 1988 இன் 68 ஆம் இலக்க உரங்கள் ஒழுங்குகுறுத்துகை சட்டத்தின் கீழ் அதற்கு எதிராக சட்டநடவடிக்கையை எடுக்க தேசிய உர செயலக அலுவலகத்திற்கு அதிகாரம் உண்டு. அதே போல் உரிய உற்பத்தித் தரப்பு அந்த உரிய உரத் தொகுதியை விநியோகித்திருக்கும் சந்தர்ப்பத்திலும் கூட, அதன் நிமித்தம் எந்த ஒரு கொடுப்பனவையும் செலுத்தாமலேயே அந்த உரத் தொகுதிற்குரிய உற்பத்தி சார்ந்த ஒப்பந்தத்தை நிறுத்த அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்களுக்கு அதிகாரம் உண்டு.

**14. உரங்கள் உரிய விதத்தில் பாவிக்கப்படுவதை உறுதிசெய்தல்**

14.1. பெற்றுக் கொள்ளப்படும் உரங்கள் குறித்த விவசாயிகளினால் உரிய தரங்கள், உரிய அளவுகள் மற்றும் உரிய நேர காலத்திற்கு உரிய பயிர்களுக்குப் பாவிக்கப்படுகின்றனவா என்பதை விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் உறுதிசெய்துகொள்ள வேண்டும். அந்த வேலைத் திட்டம் விவசாய ஆலோசகர்களினாலும், கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தர்களினாலும் மற்றும் மகாவலிப் பிரிவு மற்றும் கோட்ட பிரிவு முகாமையாளர்களினாலும் நெருங்கி கண்காணிக்கப்படுதல் வேண்டும்.

14.2. கூடுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் தேசிய உர செயலகத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர்கள் தமது கள ரீதியான விஜயங்களின் போது சரியான முறையில் உரங்கள் பாவிக்கப்படுகின்றனவா

என்பது பற்றி கண்காணிக்க வேண்டும். தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும் முன்னேற்ற அறிக்கைகளில் அது தொடர்பான விபரங்கள் உள்ளடங்கியிருக்க வேண்டும்.

**15. உரங்கள் இருப்புக் கட்டுப்பாடு**

15.1. ஒவ்வொரு கமநல சேவை நிலையத்திற்கும் உரங்கள் பகிர்ந்தளிப்பு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரங்களின் அளவுகளை அடிப்படையாகக் கொண்டு கமநல சேவை ஆலோசனைக் குழு கீழ்காணும் விடயங்கள் மீது கவனத்தை செலுத்தி அதன்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

15.2. கமநல சேவை நிலையத்தில், கடந்த பயிர்ச் செய்கைப் போகத்தில் அல்லது அதற்கு முன்னயை பயிர்ச் செய்கைப் போகங்களில் எஞ்சியிருக்கின்ற நிவாரண உரங்களின் இருப்புகள் பற்றிய எழுத்திலான ஒரு அறிக்கை பின்னர் செய்யப்பட்ட திருத்தங்கள் இன்றி உரக் களஞ்சியசாலைக்கு பொறுப்புடைய உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

15.3. கடந்த பயிர்ச் செய்கைப் போகத்தில் பெற்ற மற்றும் விவசாயிகளுக்கு விநியோகித்த உரங்களின் இருப்புப் புத்தகத்துடன் எஞ்சிய உர இருப்புக்களை இணக்கல் செய்த பின்னரே எதிர்வருகின்ற பயிர்ச் செய்கைப் போகத்திற்கான நிவாரண உரங்களுக்கு கொள்வனவுக் கட்டளையை விடுக்க வேண்டும்.

15.4. உரங்கள் பகிர்ந்தளிக்கும் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அந்தந்த கமநல சேவை நிலையத்திற்குரிய உரக் கூட்டுத் தாபனங்கள் மாத்திரமே உரங்கள் தொகைக்கான கொள்வனவுக் கட்டளையை விடுக்க வேண்டும்.

15.5. உரங்கள் பகிர்ந்தளிப்பு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகள், மேற்குறித்தவாறு கடந்த பயிர்ச் செய்கைப் போகத்தில் எஞ்சியுள்ள உரங்களின் அளவுகள் கழிக்கப்பட்டு கிடைக்கும் எஞ்சிய அளவுகள் மாத்திரமே எதிர்வருகின்ற பயிர்ச் செய்கைப் போகத்திற்கு பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.

15.6. கொள்வனவுக் கட்டளையை சமர்ப்பிக்கும் அரசாங்க உரக் கூட்டுத் தாபன உத்தியோகத்தர்களுடன் ஏற்படுத்திக் கொள்ளப்படுகின்ற முன்கூட்டிய இணக்கப்பாட்டின் பிரகாரம் செயல்படுவதன் மூலம் உரங்கள் விநியோகத்திலும் மற்றும் உரங்கள் ஏற்றலிலும் ஏற்படும் தாமதங்களை தவிர்த்துக் கொள்ள முடியும்.

15.7. உரங்களைப் பெற்றுக் கொள்ளும், பகிர்ந்தளிக்கும் செயற்பாட்டை வினைத்திறனாக மேற்கொள்ளும் முகமாக கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தரின் கண்காணிப்பில் அலுவலக நேரங்களுக்கு மேலதிகமாகவும் கமநல சேவை நிலையங்களின் களஞ்சியசாலைகளை திறந்து வைப்பதற்கான ஒரு வேலைத் திட்டத்தை செயற்படுத்த வேண்டும்.

15.8. நெற் பயிருக்கு நிவாரண உரங்களைப் பகிர்ந்தளிக்கும் கமநல சேவை நிலையங்கள் அல்லது அனுமதி பெற்ற நிறுவனங்கள், ஒவ்வொரு பயிர்ச் செய்கைப் போகத்திற்கும் என விவசாயிகளுக்கு உரங்கள் பகிர்ந்தளித்தல் ஆரம்பிக்கப்படும் திகதி மற்றும் உரிய பயிர்ச் செய்கைப் போக முடிவில் உரங்கள் பகிர்ந்தளிப்பு முடிவடையும் திகதி, தேசிய உர செயலக அலுவலகத்திற்கும், கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கும் பிரதிகளுடன் மாவட்ட உரங்கள் ஒருங்கிணைப்புக் குழுவுக்கும் கட்டாயம் எழுத்தில் அறிவிக்க வேண்டும்.

15.8.1. விவசாயிகளுக்கு உரங்கள் தேவைப்படும் தினத்திற்கு ஆகக்குறைந்தது 14 நாட்களுக்கு முன்னராவது உரிய உரங்களை கமநல சேவை நிலையத்திற்கு சேகரிக்கும் ஒரு வேலைத் திட்டத்தை அந்தந்த கமநல சேவை நிலையம் கட்டாயம் செயற்படுத்த வேண்டும்.

15.9. ஏதாவது தவிர்க்க முடியாத ஒரு காரணத்தின் அடிப்படையில் உரிய பயிர்ச் செய்கைப் போகத்தில் உரங்கள் பகிர்ந்தளித்து முடியும் தினத்தில் மாற்றம் இருக்குமாயின் அது பற்றி எழுத்தில் தேசிய உர செயலக அலுவலகத்திற்கும் மற்றும் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கும் பிரதிகளுடன் மாவட்ட உரங்கள் செயல் குழுவுக்கும் அறிவிக்க வேண்டும்.

15.10. குறித்த பயிர்ச் செய்கைப் போகத்தில் உரங்கள் பகிர்ந்தளித்து முடிவடையும் தினத்திற்கு கமநல சேவை நிலையங்களின் களஞ்சியசாலைகளிலுள்ள உரங்களின் இருப்பு பற்றி தேசிய உர செயலக அலுவலகத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளருக்கு ஒரு பிரதியுடன் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கும், உரங்கள் பகிர்ந்தளித்து முடிவடைந்த தினத்திலிருந்து இரண்டு நாட்களுக்குள் கட்டாயம் எழுத்தில் அறிவிக்க வேண்டும்.

15.10.1.உரிய பயிர்ச் செய்கைப் போக முடிவில் கமநல சேவை நிலைய களஞ்சியசாலைகளில் எஞ்சியுள்ள உரங்களின் தொகைகள் என தேசிய உர செயலக அலுவலகத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளருக்கு எழுத்தில் அறிவிக்க வேண்டியது, விவசாயிகளுக்கு வழங்கிய சகல உரங்கள் இருப்புத் தொகைகளும் விநியோகிக்கப்பட்டதன் பின்னர் எஞ்சியுள்ள உரங்களின் தொகையாகும். உரிய பயிர்ச் செய்கைப் போகத்தில் உரங்கள் பகிர்ந்தளித்து முடிந்த தினத்தின் பின்னர் கமநல சேவை நிலையங்களின் களஞ்சியசாலைகளில் பௌதீக ரீதியில் இருக்க வேண்டியது இவ்வாறு எழுத்தில் அறிவிக்கப்பட்டுள்ள அந்த உரங்களின் அளவுகள் மாத்திரமேயாகும்.

15.11. உரிய பயிர்ச் செய்கைப் போகம் முடிவில் உரங்களின் தொகைகள் பகிர்ந்தளித்தல் தொடர்பான விபரங்களை உள்ளடக்கி இத்துடன் காணப்படும் அட்டவணை 15 எனும் மாதிப் படிவத்தை, உரங்கள் விநியோகம் முடிவடைந்த தினத்திலிருந்து 14 வேலை நாட்களுக்குள் மாவட்ட உர ஒருங்கிணைப்புக் குழுவின் மூலம் தேசிய உர செயலக அலுவலகத்தின் பணிப்பாளருக்கு ஒரு பிரதியுடன் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கும் கட்டாயம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். இந்தப் பொறுப்பு கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தர்களுக்கும், கமநல அபிவிருத்தி மாவட்டப் பிரதி / உதவி ஆணையாளர்களுக்கும் தேசிய உர செயலக அலுவலகத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர்களுக்கும் சாட்டப்படுகின்றது.

15.11.1. அட்டவணை 15 இல் இலக்கம் 10 இல் குறிப்பிடப்பட்டுள்ள எஞ்சிய உரங்களின் இருப்புத் தொகையும் மற்றும் இங்குள்ள 15.10 ஆம் பிரிவின் கீழ் தேசிய உர செயலக அலுவலகத்தின் பணிப்பாளருக்கு ஒரு பிரதியுடன் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கு எழுத்தில் அறிவிக்கப்பட்டுள்ள எஞ்சிய உரங்களின் இருப்புத் தொகையும் சமனாக இருக்க வேண்டும்.

**16. உரங்களின் இருப்புப் புத்தகங்களையும் விபரங்கள் அடங்கிய ஆவணங்களையும் பேணுதல்**

16.1. விவசாயிகளுக்கு நிவாரண உரங்களை விநியோகிக்கும் பொறுப்பை வகிக்கின்ற கமநல சேவைக் குழுவி◌னலும் மற்றும் உரங்கள் பகிர்ந்தளிப்பு செயற்பாட்டின் நிமித்தம் முழுமையான அனுமதியைப் பெற்றுள்ள சகல நிறுவனங்களினாலும் தமது உரக் களஞ்சியசாலைகளில் காணப்படுகின்ற நிவாரண உரங்களின் இருப்புக்கள் தினமும் இணக்கல் செய்யப்பட்டுப் பேணப்படுதல் வேண்டும்.

16.2. விவசாயிகளுக்கு நிவாரண உரங்களை விநியோகிக்கும் பொறுப்பை வகிக்கின்ற கமநல சேவைக் குழு பெற்றுக் கொண்ட உரங்களின் வகைகள் மற்றும் அளவுகள், களஞ்சியப்படுத்திய இடங்கள், உரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட விவசாயிகளின் பெயர்கள், தேசிய அடையாள அட்டை இலக்கங்கள், முகவரிகள், ஒவ்வொரு விவசாயிக்கும் பெற்றுக் கொடுக்கப்பட்ட உரங்களின் அளவுகள் மற்றும் அந்த அளவுகளுக்கு உரிய வயல் காணிகளின் அளவுகள் என்பவற்றைக் குறிப்பிடும் ஒரு பட்டியல் தினமும் இற்றைப்படுத்தப்பட்டுப் பேணப்படுதல் வேண்டும்.

16.3. ஏதாவது ஒரு பயிர்ச் செய்கை முடிவின் போது உரங்களின் களஞ்சிய இருப்புத் தொகையை பரிசீலித்து இறுதி உரங்கள் இருப்புத் தொகை அறிக்கையை ஒவ்வொரு கமநல சேவை நிலையமும் தயாரிக்க வேண்டும்.

16.3.1. உரக் களஞ்சியங்களை பரிசீலிக்கும் பொருட்டு மாவட்ட செயலாளர் கீழ்காணும் உத்தியோகத்தர்கள் அடங்கிய ஒரு குழுவை நியமிக்க வேண்டும்.

- உர செயலக அலுவலகத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளரினால் அல்லது அந்த மாவட்ட உதவிப் பணிப்பாளர் இல்லாத மாவட்டங்களில் மாவட்ட செயலாளரினால் பெயர் குறிக்கப் படும் உத்தியோகத்தர் ஒருவர்

- மாவட்ட கமநல அபிவிருத்தி பிரதி/உதவி ஆணையாளரினால் அல்லது அவரினால் பெயர் குறிக்கப்படும் தகவுடைய பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர் மற்றும் மாவட்ட கமநல அபிவிருத்திப் பிரதி/உதவி ஆணையாளர் அலுவலகங்களிலுள்ள உரங்கள் விடயத்திற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள்

16.3.2. உரிய பயிர்ச் செய்கைப் போகத்தினுள் உரங்கள் பகிர்ந்தளித்து முடிவடைந்த 07 நாட்களின் பின்னர் களஞ்சிய பரிசீலனை நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும். 30 நாட்களுக்குள் சகல உரக் களஞ்சியசாலைகளையும் பரிசீலித்து இறுதி அறிக்கைகளை தயாரித்து மாவட்ட கமநல அபிவிருத்தி பிரதி / உதவி ஆணையாளருக்கும் மற்றும் தேசிய உர செயலக அலுவலகத்தின் பணிப்பாளருக்கும் பிரதிகளுடன் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டும்.

16.3.3. உரங்களின் களஞ்சிய இப்புத் தொகையை பரிசீலிக்கும் நடைமுறை பற்றி அட்டவணை 19 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு அமைய உரக் களஞ்சியசாலைகளை பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும். உரிய பயிர்ச் செய்கைப்போக முடிவில் கமநல சேவை நிலையங்களின் நிவாரண உரக் களஞ்சியசாலைகளின் இறுதி உரங்கள் இருப்புத் தொகை இணக்கல் அறிக்கை அட்டவணை 20 இன் பிராகரம் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

**17. கண்காணிப்பு**

17.1. உரிய கண்காணிப்பு, முன்னேற்றம் பற்றி அறிக்கையிடுதல், முன்னேற்ற மீளாய்வு, பெறுபேறுகளின் மதிப்பீடு என்பவற்றில்தான் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் வெற்றி தங்கியிருக்கின்றது. எனவே பங்காளித்துவத் தரப்புக் குழுக்கள் மற்றும் நன்மை பெறுநர்கள் அதிகளவில் உள்ள உர நிவாரண நிகழ்ச்சித் திட்டத்திற்கான செயற்படுத்துகை முறையியல்களும் மூலோபாயங்களும் அடங்கலாக அறிவுரைகளை எவ்வளவுதான் வழங்கினாலும், உரிய கண்காணிப்பும், மதிப்பீடும் இல்லாமல் அந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அல்லது பெறுபேறுகளை அடைந்து கொள்ள முடியாது.

17.2. தேவையான உரங்களை மதிப்பிடுதல், பெற்றுக் கொள்ளல், பகிர்ந்தளித்தல் மற்றும் பயிர்களுக்கு இடுதல் முதலிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நெருங்கிக் கண்காணிக்கும் பொருட்டு வலிமையான ஒரு வேலைத் திட்டம் மாவட்ட உர ஒருங்கிணைப்புக் குழுவினால் செயற்படுத்தப்படுதல் வேண்டும். இந்தக் குழுவில் ஒவ்வொரு நிருவாக மட்டத்தையும் பிரதிநிதிப்படுத்துகின்ற நிறுவனங்களையும் அவற்றின் உத்தியோகத்தர்களையும் சரியாக இணங்கண்டு கண்காணிப்புப் பொறுப்பை சரியாக உரிய முறையில் ஒப்படைப்பது அவசியமாகும்.

17.3. தனது மாவட்டத்திற்கான உரங்களைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பகிர்ந்தளித்தல் செயற்பாட்டை கமநல சேவை நிலைய மட்டத்தில் கண்காணிப்பதும் மற்றும் அந்த நிகழ்ச்சித் திட்டங்களின் உரிய இலக்குகளின் பிரகாரம் செயல்படுவதும் மாவட்டத்திற்கு பொறுப்புடைய சகல கமநல அபிவிருத்தி பிரதி / உதவிப் பணிப்பாளர்களின் நேரடியான ஒரு பொறுப்பாகும். மேலும், தேசிய உர செயலக அலுவலகம் மாவட்டங்களுக்கு என நியமித்துள்ள உதவிப் பணிப்பாளர்கள் அந்தந்த மாவட்டங்களில் உர நிகழ்ச்சித் திட்டத்தை முறையாக செயற்படுத்தும் நேரடியான பொறுப்பைக் கொண்டுள்ளனர்.

17.4. சகல அதிகாரப் பிரதேசங்களினதும் நிவாரண உரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கு உரிய அனைத்து விடயங்களையும் இந்த வழிகாட்டல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளுக்கு இணங்க பிரதேச செயலாளர்கள் வழிகாட்டி கண்காணிப்பார்களாயின் மிகவும் பொருத்தமாகும். தேவையான உரங்களை மதிப்பிட்டு உரங்கள் பகிர்ந்தளிப்பு பற்றிய முன்னேற்றமும் பிராந்திய விவசாயக் குழுக் கூட்டங்களின் போது விரிவாக மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்.

17.5. ஒவ்வொரு மாவட்டத்திற்கும், உரிய பயிர்ச் செய்கைப் போகத்தினுள் விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு என எதிர்பார்த்த உரங்களின் அளவுகளில் பிரச்சினைகள் எழாத வகையில் உரங்கள் பகிர்ந்தளிப்புக்கு மாவட்ட உர ஒருங்கிணைப்புக் குழு வழிகாட்டுமாயின், மிகவும் பொருத்தாமாகும்.

**18. தகவல்களை சமர்ப்பித்தல் மற்றும் முன்னேற்றம் பற்றி அறிக்கையிடுதல்**

18.1. நிவாரண அடிப்படையிலான உரங்கள் பகிர்ந்தளிப்பு வேலைத்திட்டத்தை முறையாக செயற்படுத்த தகவல்களையும் முன்னேற்ற அறிக்கைகளையும் உரிய நேர காலத்திற்கு கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும். உரங்களைப் பெற்றுக் கொள்ளல், உரங்களை களஞ்சியப்படுத்தல் மற்றும் உங்களை விநியோகித்தல் முதலிய செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற எந்த ஒரு நிறுவனமாக அல்லது நபராக இருந்தாலும், தேசிய உர செயலக அலுவலகம் வழங்குமாறு கேட்டுக் கொள்கின்ற தகவல்களை அல்லது அறிக்கைகளை சமர்ப்பிப்பதானது 1988 இன் 68 ஆம் இலக்க உரங்கள் ஒழுங்குறுத்துகை சட்டத்தின் 12 (1) (உ) பிரிவின்படி சட்டமுறையான கடப்பாடாகும்.

18.2. பயிர்ச் செய்கைப் போகத்தில் நிவாரண அடிப்படையிலான உரங்கள் பகிர்ந்தளித்தல் முடிவடைந்த தினத்திலிருந்து ஒரு வார காலத்திற்குள் சகல விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களும் அந்த உதவியாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படாதுள்ள பிரதேசங்களில், உரிய உத்தியோகத்தர்களும் நிவாரண உரங்களைப் பெற்றுக்கொண்ட விவசாயிகளின் பெயர்கள் மற்றும் பெற்றுக் கொண்ட உரங்களின் அளவுகள் என்பவற்றைக் குறிப்பிடுகின்ற ஒரு பட்டியலைத் தயாரித்து அனுப்பி, அந்தப் பட்டியலை தத்தமது அலுவலகங்களிலும், கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களிலும் மற்றும் கமக்காரர் அமைப்புகளின் தலைவர்களினது இல்லங்களிலும் மற்றும் மகாவலிப் பிரதேசங்களின் மகாவலிப் பிரிவு முகாமையாளர் அலுவலகங்களிலும் பொது மக்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு காட்சிப்படுத்த வேண்டும்.

18.3. இந்தப் பட்டியல் மற்றும் உரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள அளவுகள் ஆகியன தொடர்பாக பொது மக்கள் செய்யும் முறைபீடுகளை விசாரிப்பதற்காக உரிய பிரதேச செயலாளர்களுக்கும் மற்றும் மாவட்ட செயலாளர்களுக்கும் பிரதிகளுடன் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கும் குறிப்பீடு செய்வதற்கான ஒரு வேலைத் திட்டத்தை செயற்படுத்த வேண்டும்.

18.4. கமநல சேவை நிலையங்கள், எல்லா உரங்களும் கிடைத்து முடிந்தவுடனே நிவாரண உரங்களின் இருப்புத் தொகை பற்றி அட்டவணை 17 இன்படி மாவட்ட உதவிப் பணிப்பாளர்களுக்கு பிரதிகளுடன் மாவட்டத்திற்கு பொறுப்புடைய கமநல அபிவிருத்தி பிரதி / உதவி ஆணையாளர்களுக்கு அறிக்கை இடுதல் வேண்டும். உரங்களைப் பெற்றுக் கொள்ளல் பற்றிய முன்னேற்றம், விவசாயிகளுக்கு விநியோகித்தல் தொடர்பான முன்னேற்றம் மற்றும் உரக் களஞ்சியசாலைகளிலுள்ள உரங்களின் இருப்புத் தொகை முதலியவற்றைக் குறிப்பிடுகின்ற அறிக்கைகள் என்பன தொடர்பாக ஒவ்வொரு திங்கட்கிழமை நாளிலும் மு.ப. 9.00 மணிக்கு முன்னர் தத்தமது நிறுவனங்களுக்கு உரிய மாவட்ட அலுவலகங்களுக்கு அறியப்படுத்தப்படுதல் வேண்டும். மாவட்டத்திற்கு பொறுப்புடைய கமநல அபிவிருத்திப் பிரதி/உதவி ஆணையாளர்களும் தேசிய உர செயலக அலுவலகத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர்களும் தேசிய உர செயலக அலுவலகத்தின் பணிப்பாளருக்கு பிரதிகளுடன் கமநல அபிவிருத்தி ஆணையாளருக்கும் உரங்கள் பகிர்ந்தளித்தல் பற்றிய வாராந்த அறிக்கையை அட்டவணை 18 இன்படி சமர்ப்பிக்க வேண்டும்.

18.5. நிவாரண அடிப்படையிலான உரங்கள் பகிர்ந்தளிப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் சம்பந்தப்படும் கிராமிய மட்டம் முதல் தேசிய மட்டம் வரையான சகல நிறுவனங்களும் தாம் பொறுப்பு வகிக்கின்ற கரும பணிகளின் அளவுகளுக்குரிய ஒரு மாதாந்த முன்னேற்ற அறிக்கையை, அடுத்த மாதத்தின் 05 ஆம் திகதி முடிவடைவதற்கு முன்னர் தமது கண்காணிப்பு உத்தியோகத்தர்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும்.

18.6. நிவாரண அடிப்படையிலான உரங்கள் பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தில் சம்பந்தப்படும் சகல பிராந்திய மட்ட உத்தியோகத்தர்களும் உரங்கள் பகிர்ந்தளிப்பு பற்றிய முன்னேற்றத்தை சுட்டிக் காட்டும் அறிக்கைகளை பிராந்திய விவசாயக் குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

18.7. நிவாரண அடிப்படையிலான உரங்கள் பகிர்ந்தளிப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் சம்பந்தப்படுகின்ற சகல மாவட்ட மட்ட உத்தியோகத்தர்களும் உரங்கள் பகிர்ந்தளித்தல் பற்றிய முன்னேற்றங்களைக் குறிப்பிடுகின்ற அறிக்கைகளை மாவட்ட விவசாயக் குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

18.8. கீழ்காணும் அறிக்கைகளை அந்தந்த நிறுவனங்கள் **உரிய காலப் பகுதியினுள் சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.**

18.8.1. கமநல சேவை நிலையங்களில் குறித்த மாத ஆரம்பத்திலுள்ள உரங்களின் இருப்புத் தொகை, அந்த மாதத்தினுள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள உரங்களின் அளவுகள், மாதத்தினுள் பகிர்ந்தளிக்கப்பட்ட உரங்களின் அளவுகள் மற்றும் குறித்த மாத முடிவில் எஞ்சியிருக்கின்ற உரங்களின் அளவுகள் என்பவற்றைக் குறிப்பிடுகின்ற மாதாந்த உரங்கள் இருப்புத் தொகை தொடர்பான ஒரு அறிக்கை (அட்டவணை 16) இன்படி தயாரிக்கப்பட்டு, அடுத்து வரும் மாதத்தின் 05 ஆம் திகதிற்கு முன்னர் கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தர்களினால் மாவட்டத்திற்கு பொறுப்புடைய கமநல அபிவிருத்திப் பிரதி / உதவி ஆணையாளர்களுக்கும் மற்றும் தேசிய உர செயலக அலுவலகத்திற்கும் பிரதிகளுடன் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

18.8.2. பயிர்ச் செய்கைப் போகத்தில் நிவாரண அடிப்படையிலான உரங்களின் விநியோகம் முடிவடைந்த தினத்திலிருந்து 14 நாட்களுக்குள் அந்தப் பயிர்ச் செய்கைப் போகத்தில் உரங்கள் பகிர்ந்தளித்தமை தொடர்பான அறிக்கை கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தர்களினால் (அட்டவணை 15) பிரகாரம் மாவட்டத்திற்கு பொறுப்புடைய கமநல அபிவிருத்தி பிராந்திய / உதவி ஆணையாளர்கள் மற்றும் தேசிய உர செயலக அலவலகத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு பிரதிகளுடன் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கும் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

18.8.2.1. பயிர்ச் செய்கைப் போகம் முடிவடைந்து நடத்தப்படும் அண்மித்த கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தர்களின் மாதாந்தக் கூட்டத்தில் குறித்த இந்த முன்னேற்ற அறிக்கைகளில் குறிப்பிடப் பட்டுள்ள தகவல்கள் விரிவாக ஆராயப்பட்டு, அவற்றின் செவ்வைத்தன்மை உறுதிசெய்யப்பட்டு தமது அவதானிப்புகள் அடங்கிய ஒரு அறிக்கை மாவட்டத்திற்கு பொறுப்புடைய கமநல அபிவிருத்தி பிராந்திய / உதவி ஆணையாளர்களினால் தேசிய உர செயலக அலுவலகத்தின் பணிப்பாளருக்கு ஒரு பிரதியுடன் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

18.8.2.2. தேசிய உர செயலக அலுவலகத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர்களும் மேற்குறித்த கூட்டத்தில் கலந்து கொண்டு பயிர்ச் செய்கைப் போகத்தினுள் நிவாரண உரங்கள் பகிர்ந்தளிப்பு தொடர்பான முன்னேற்றத்தை மீளாய்வு பொருட்டு கமநல அபிவிருத்தி பிராந்திய / உதவி ஆணையாளர்களுக்கு உதவுதல் வேண்டும். தமது மாவட்டத்தின் கமநல சேவை நிலையங்களை தனித்தனியாக கருத்திற் கொண்டு உரங்கள் பகிர்ந்தளிப்பு தொடர்பான முன்னேற்றத்தை குறிப்பிடுகின்ற பகுப்பாய்வு ரீதியான ஒரு அறிக்கை, பயிர்ச் செய்கைப் போகம் முடிவடைந்து ஒரு மாத காலத்திற்கள் தேசிய உர செயலக அலுவலகத்தின் பணிப்பாளருக்கு ஒரு பிரதியுடன் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

18.8.2.3. தேசிய உர செயலக அலுவலக்ததின் மாவட்ட உதவிப் பணிப்பாளர்கள் மாவட்டத்தின் உரங்கள் பகிர்ந்தளித்தல் தொடர்பான ஒரு மாதாந்த சுருக்க அறிக்கையை (அட்டவணை 14) அடுத்து வரும் மாதத்தின் 10 ஆம் திகதிற்கு முன்னர் தேசிய உர செயலக அலுவலகத்தின் பணிப்பாளருக்கு ஒரு பிரதியுடன் கமநல அபிவிருத்தி ஆணையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

18.8.3. அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்களின் தலைமை மற்றும் பிராந்திய உரக் களஞ்சியசாலைகளில் குறித்த மாதம் ஆரம்பத்திலுள்ள உரங்களின் இருப்புத் தொகை, குறித்த அந்த மாதத்தினுள் பெற்றுக் கொள்ளப்பட்ட உரங்களின் அளவுகள், அந்த மாதத்தினுள் பகிர்ந்தளித்த உரங்களின் அளவுகள் மற்றும் அந்த மாதம் முடிவில் எஞ்சியிருக்கின்ற மாதாந்த உரங்களின் இருப்புத் தொகை பற்றிய அறிக்கையை உரக் களஞ்சியத்திற்கு பொறுப்புடைய உத்தியோகத்தர்கள் தயாரித்து அடுத்து வரும் மாதத்தின் 05 ஆம் திகதிற்கு முன்னர் கம்பனியின் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

18.8.4. அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்களின் சகல உரக் களஞ்சியசாலைகளிலும் ஒவ்வொரு மாதத்தின் ஆரம்பத்திலுள்ள உரங்களின் இருப்புத் தொகை, நிவாரண அடிப்படையில் உரங்களின் விநியோகம் மற்றும் ஏனைய உரங்கள் விநியோகம், கேள்வி நடைமுறையின் கீழ் செய்த இறக்குமதிகள் மற்றும் ஏனைய கிடைப்புகள் மற்றும் எதிர்வரும் 03 மாத காலப் பகுதியில் எதிர்பார்க்கும் உர இறக்குமதிகள் என்பன தொடர்பான மாதாந்த அறிக்கையை (உரங்களின் கொள்வனவை இலக்காகக் கொண்ட அறிக்கை) அடுத்து வரும் மாத்தின் 10 திகதிற்கு முன்னர் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

## 19. முன்னேற்ற மீளாய்வு

19.1. தேவையான உரங்களின் அளவுகளை மதிப்பிடுதல், பெற்றுக் கொள்ளல், பகிர்ந்தளித்தல் மற்றும் பயிர்களுக்கு இடுதல் என்பன பற்றி கீழ்காணும் கூட்டங்களிலும் மற்றும் குழுக் கூட்டங்களிலும் கலந்துரையாடப்படுதல் வேண்டும்.

i. கமக்காரர் அமைப்புகளின் மாதாந்தக் கூட்டம்
ii. கமநல சேவை ஆலோசனைக் குழுக் கூட்டம்
iii. விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களின் வாராந்தக் கூட்டம்
iv. கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தர்களின் மாதாந்தக் கூட்டம்
v. விவசாய ஆலோசகர்களின் மாதாந்தக் கூட்டம்
vi. ஏனைய பயிர்கள் சம்பந்தமான ஆராய்ச்சி / கருத் திட்ட உத்தியோகத்தர்களின் மாதாந்தக் கூட்டம்
vii. அரசாங்க உரக் கூட்டுத் தாபனப் பிராந்திய மற்றும் விடயத்திற்குப் பொறுப்புடைய முகாமைத்துவ உதவியாளர்களின் மாதாந்தக் கூட்டம்
viii. பிராந்திய விவசாயக் குழுக் கூட்டம்
ix. மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம்
x. கமநல அபிவிருத்திப் பிரதி / உதவி ஆணையாளர்களின் கூட்டம்
xi. விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் மாகாண விவசாயப் பணிப்பாளர்களுடன் நடத்தப்படும் கூட்டம்
xii. பயிர்ச் செய்கைப் போகங்களின் முன்னேற்ற மதிப்பீட்டுக் கூட்டம்
xiii. நீர்ப்பாசன அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்
xiv. மகாவலி அபிவிருத்தி தொழில்முயற்சிகளுக்குரிய தொழிமுயற்சிக் குழுக் கூட்டம்
xv. மாவட்ட உர ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

**20. பெறுபேறுகளை மதிப்பிடுதல்**

20.1. சுற்றாடல்நேய உரங்களை மாத்திரம் இட்டு நெற் பயிர்ச் செய்கை முழுமையாக மேற்கொள்ளப் படும் இந்தப் பெரும்போகத்தில் கமநல சேவை நிலைய அதிகாரப் பிரதேசங்களில் ஒவ்வொரு நெற் பயிர் பிரிவிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயி ஒருவரின் வயல் காணி கள ரீதியான பரிசீலனைப் பிரிவாக பயன்படுத்தப்படுதல் வேண்டும். அந்த விவசாயினது பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம், வயல் காணியின் பெயர், வயல் காணியின் அளவு முதலியன போன்ற விபரங்கள் அடங்கலாக பயிரிடப் பட்டுள்ள நெல் இனம், இடப்படும் உர வகைகள், பயிரிடுவதற்கு முன்னர் மண்ணின் தன்மை மற்றும் உரிய பயிர்ச் செய்கைப் போகத்தில் பயிர்களின் வளர்ச்சி தொடர்பாக பெற்றுக் கொள்ள வேண்டிய ஏனைய தரவுகள் என்பவற்றை பொருத்தமான விதத்தில் பெற்றுக் கொள்வதற்கு விவாசயப் பணிப்பாளர் நாயகத்தினால் சரியான ஒரு முறையியல் அறிமுகப்படுத்தப்படும்.

20.2. நிவாரண அடிப்படையில் உரங்களைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் விளைச்சல்களின் பயன்கள், விவசாயிகளின் வாழ்வாதார நிலைகள் மற்றும் தேசிய பொருளாதாரம் ஆகியவற்றுக்கு கிடைத்த விளைவுகளை ஒவ்வொரு பயிர்ச் செய்கைப் போகம் முடிவடைந்து ஒரு மாத காலப் பகுதிற்குள் மதிப்பீடு செய்து அவதானிப்புகளை முன்வைப்பதற்கு மாவட்ட உரங்கள் செயல் குழு உரிய நடவடிக்கையை எடுக்குமாயின், மிகவும் பொருத்தமாகும்.

20.3. மாவட்டத்திற்கு பொறுப்புடைய கமநல அபிவிருத்திப் பிரதி / உதவி ஆணையாளர்களினால் சகல மாவட்டங்களினதும் ஒவ்வொரு கமநல சேவை நிலையத்தையும் கருத்திற் கொண்டு ஒவ்வொரு பயிர்ச் செய்கைப் போகத்தில் நிவாரண உரங்களைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகியன பற்றிய ஒரு மதிப்பீட்டு அறிக்கை மாவட்ட செயலாளருக்கும், விவசாயப் பணிப்பாளர் நாயகத்திற்கும் மற்றும் தேசிய உர செயலக அலுவலகத்தின் பணிப்பாளருக்கும் பிரதிகளுடன் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.